பக்கங்கள்: 12
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | மாசி 20 | திங்கட்கிழமை 04.03.2019 | கதிர் 120

## இது ரகசியம் அல்ல!

நேற்று மதியம் சாப்பாட்டுக் கடையில் ஓர் அரசியல் செயற் பாட்டாளரைச் சந்தித்தேன். நடுத் தர வயதுக்காரர் அவர்.

*"உந்தச்சனத்தைநம்பக்கூடாது; நம்பமுடியாது"* – என்று தமக் குள்ளேயே சினந்தபடி கூறினார் அவர்.

பக்கம் 02 »



அபிநந்தனுடன் வந்த அந்தப் பெண் யார்?

உள்ளே பக். 06

மக்கள் கண்ணீர் சிந்திக் கதறியழ இடமளியுங்கள்!

உள்ளே பக். 08



ஆஸ்திரேலிய அணிக்கு பதிலடி கொடுத்த இந்தியா

உள்ளே பக். 10



## ஜெனீவாவில் வரும் பிரேரணைக்கு இலங்கையும் இணை அனுசரணை?

கொழும்பு, மார்ச் 04

இலங்கையில் மனித உரிமைகள், பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவித்தல் தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்படவுள்ள புதிய பிரேரணைக்கு பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளுடன் இலங்கையும் இணை அனுசரணைத் தரப்பாக இணையவுள்ளதாகத் பக்கம் 11 »

# புதிய அரசமைப்பைத் தமிழர் கூட்டாக நிராகரிக்கவேண்டும்

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம், மார்ச் 04

தமிழ்த் தரப்புக்கள் கடந்த மூன்று தடவைகள் நிராகரித்த ஒற்றையாட்சி அரசமைப்பை எம்மவர்களின் துணையுடனே நான்காவது தடவையாகவும் கொண்டு வருவதற்கான முயற்சிகள் நடக்கின்றன. இதனை ஆதரிக்கவேண்டுமெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், எதிர்க்கத் தேவையில்லை என முன்னாள் முதலமைச்சர் தரப்பும் கூறுகின்றன. ஆனால் எம்மைப் பொறுத்தவரை அதனைத் தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக நிராகரிக்கவேண்டும்.


– இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். பக்கம் 11 »



## தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் பேரெழுச்சியுடன் நடந்த மகளிர் அணி மாநாடு

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணியின் ஏற்பாட்டில் ஒழுங்கமைக்கப்பட்ட பக்கம் 02 »

## ஜெனீவாவுக்கு போவாரா விக்கி?



கொழும்பு, மார்ச் 04

வடக்கு மாகாண முன்னாள் முதல்வரும், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான சி.வீ.விக்னேஸ்வரன் ஜெனீவாவுக்குப் பக்கம் 11 »

## நீதிமன்றின் உத்தரவையும் மீறி நகரில் நேற்று கேபிள் கம்பங்களை நட்ட குழு

### படம் பிடித்த ஊடகவியலாளருக்கும் அச்சுறுத்தல்

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் மாநகர சபையின் அனுமதியில்லாமல் வீதி யோரங்களில் கம்பங்கள் நடுவதற்கு இடமளிக்க முடியாது என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கும் பக்கம் 11 »



## நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறை ஒழிக்க இது தகுந்த தருணமே அல்ல

### அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 04

அதிகாரத்தை பகிர்ந்து தீர்வுகளை நோக்கி பயணிக்க ஏதேனும் திருத்தங்கள் கொண்டு பக்கம் 02 »

## வறுமையைப் போக்கும் பட்ஜெட் தயார் நிலையில்!




கொழும்பு, மார்ச் 04

ஐக்கிய தேசியக் கட்சியின் 2019 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் இறுதி நிலையை எட்டியுள்ளது. பக்கம் 11 »

## திருப்பதியில் எடைக்கு எடை காணிக்கை செலுத்திய ரணில்



புதுடில்லி, மார்ச் 04

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று இந்தியாவின் திருப்பதி திருமலை வெங்கடேஸ்வர பெருமானைத் தரிசனம் செய்தார். பக்கம் 11 »

## பல்கலை மாணவரின் ஏற்பாட்டில் 16ஆம் திகதி நீதி கோரிப் பேரணி

- எஸ்.நிதர்ஷன் -

ஈழத்தமிழர்களிற்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கோரி எதிர்வரும் 16 ஆம் திகதி மக்கள் எழுச்சிக்கு போராட்டமொன்றை முன்னெடுக்க உள்ளதாக யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. பக்கம் 11 »

## திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் சிவராத்திரி வளைவு அகற்றம்



மன்னார், மார்ச் 04

மன்னார் திருக்கேதீஸ்வரம் சிவன் ஆலயத்துக் குச் செல்லும் வீதியில் அமைக்கப்பட்ட சிவராத்திரி வீதி பக்கம் 11 »

## பலாலியில் சர்வதேச விமான நிலையம் அமைப்பதென்பது பொய்த் தகவலாம்!

### கூறுகின்றார் மஹிந்த ராஜபக்ஷ



கொழும்பு, மார்ச் 04

இந்தியாவின் உதவியுடன் பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாகப் புனரமைக்கவுள்ள பக்கம் 02 »

விளம்பரம் மற்றும் செய்தி தொடர்பு
kalaikkathirnews@gmail.com
https://kalaikathir.online

# மத சுதந்திரத்தை மக்களுக்கு அதிகமாகவே வழங்குவோம்!

## கூறுகின்றார் கோட்டாபய

கொழும்பு, மார்ச் 04

எதிர்காலத்தில் அமையவுள்ள தங்களது அரசில் நாட்டிலுள்ள அனைவருக்கும் மத ரீதியிலான சுதந்திரம், அதிகமாக வழங்கப்படுமென முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்தோடு தாம் இனவாதிகள் அல்லர் என்றும், எந்த இனம் அல்லது மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் இந்த நாட்டை நேசிப்பவர்களாக இருக்கவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் சனிக் கிழமை இடம்பெற்ற எலிய அமைப் பின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

எமது அரச காலத்தில், இந்த நாட்டில் உள்ள அனைத்துப் பிரஜைகளும் கௌரவமாக வாழக் கூடிய வழிவகைகளை நாம் ஏற்படுத்துவோம்.

எதிர்காலத்தில் அமையவுள்ள



எமது அரசில், அனைத்து மக்களுக்கும் சம உரிமை வழங்குவதே பிரதான கொள்கையாக இருக்கும்.

நாம் கடந்த காலங்களில் ஏதேனும் ஒரு செயற்பாட்டை செய்திருந்தால், அது எமது தனிப்பட்ட தேவைக்காக அன்றி, நாட்டின் நலனுக்காகப் பாதுகாப்புச் செயலாளர் என்ற வகையிலேயே மேற்கொண்டிருந்தோம். பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியிலேயே நாம் இதனைச் செய்திருந்தோம்.

எனினும், எமக்கெதிராக பொய்ப்பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட் டன. ஆனால், தற்போது அனைவருக்கும் உண்மை தெரிய வந் துள்ளது. நாம் இனவாதிகள் அல்லர் – என்றார். (ஐ)

## ...லாவியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக அரசு போலியான தகவல்களை வெளியிட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் வர்த்தக சமூகத்தினரைச் சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தியபோதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தமது ஆட்சிக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட அம்பாந்தோட்டை - மத்தள சர்வதேச விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய முடியாத அரசால், மற்றுமொரு சர்வதேச விமான நிலையத்தை நிறுவுவதற்கான திறன் கிடையாது .

அத்துடன், 1988 - 1989 காலப் பகுதியில் நாட்டிற்குள் ஏற்பட்ட வன்முறையுடனான காலப் பகுதியொன்று மீண்டும் நாட்டில் உருவாகி வருகிறது.

நாட்டில் தற்போது பல கடத்தல் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, யுத்தம் நிறைவுக்கு கொண்டு வந்த தருணம் முதலே, நாட்டில் நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

யுத்தம் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டமை மாத்திரமன்றி, தெற்கு மற்றும் வடக்கு மக்களுக்கு எவ்வித அச்சமும், சந்தேகமும் இன்றி வாழ்வதற்கான சூழலை, தமது அரசு அன்றே ஏற்படுத்திக் கொடுத்தது.

இலங்கை மக்களுக்கு நன்மை கிடைக்கவேண்டும் என்ற எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டே தமது அரசு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுத்தது.

ஐக்கிய தேசியக் கட்சி அரசால் வர்த்தகர்களுக்கு நன்மை கிடைக்கும் என்ற எண்ணம் சிலருக்குக் காணப்படுகின்ற போதிலும், அது இன்று கனவாகியுள்ளது– என்றார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ன பிரச்சினை என்று விசாரித்தேன். நேற்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம் பக்கம் போய் வந்திருக்கின்றார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணி சர்வதேச தினத்தை ஒட்டி நடத்திய மகளிர் எழுச்சி தினத்தைப் பார்த்து விட்டு வந்துதான் இந்தப் புலம்பல்.

*"அண்ணே... நல்ல கிறவுட். யாழ்ப்பாணத்துப் பொம்பளைகள் எல்லாம் அங்கதான் நிக்கினம் போல. அவ்வளவு கூட்டம். நல்லாத்தான் ஓர்க்கனைஸ் பண்ணியிருக்கிறாங்கள்."* – என்றார்.

*'மகளிர் எழுச்சிவிழா எல்லோ... அதுதான் வலு எழுச்சி போல...'* - என்று வியாக்கியானம் கூறினேன் நான்.

*"அது இல்லை அண்ணே விசயம். இப்ப போன மாதம் உவர் சுரேஷின்ரை ஈ.பி.ஆர்.எல். எவ்வும் ஒரு கூட்டம் போட்டுது... ஒரே சனக் கூட்டம்... விக்கியர் கூட்டம் போட்டாலும் அப்படித்தான் சனம் திரளுது... ஏன் சுமந்திரன் வந்து கூட்டம் வைச்சாலும் சனம் பெருமளவிலை கூடுது... போற போக்கிலை இனி உவர் சங்கரியார் கூட்டம் போட்டாலும் ஓர் ஆயிரம் வந்து கூடினாலும் கூடும்...!"* – என்றார் அவர்.

*"நல்லதுதானே தம்பி... சனத்துக்கு நல்ல அரசியல் விழிப்புணர்வு வந்திட்டுது எண்டு சந்தோஷப்படத் தானே வேணும்... அதுக்கேன் சினக்கிறீர்...?"*–என்று நான் கேட்டேன்.

*"இல்லை... இப்படிச் சனம் வருகுது எண்டு நம்பி தேர்தல் அரசியலிலை இறங்கினால் பொறுத்த நேரத்திலை கவிழ்த்து எல்லோ விடுகுது .... இப்படிக் கூட்டத்துக்குத் திரளுற சனம் வோட்டுப் போட்டுது எண்டால் ஒன்று, இரண்டு சீட்டாவது கிடைக்க வேணும் ... ஆனால் அதுகள் கவிழ்த்து வீழ்த்திப் போட்டுஎல்லோ போகுதுகள்...!"*– என்று தன் விசனத்தைக் கொட்டினார்.

தலையாட்டி விட்டுக் கிளம்பினேன் நான். அலுவலகத்துக்குப் போன கையோடு மாற்றுத் தமிழ் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவரோடு பேசினேன். அவரது சூட்டைக் கிளப்ப நான் முதலில் வத்தி வைத்தேன்.

*'என்ன இண்டைக்குச் சைக்கிள் காரின்ரை கூட்டத்திலை அவ்வளவு தாய்க்குலமும் ஒண்டு சேர்த்து நிக்குதாம். அப்ப இந்த முறை தாய்க்குல 'வோட்டு' எல்லாம் மாமனிதரின்ரை மகனுக்குத் தான் போல ..."*– என்று அவர் வாயைக் கிளறினேன் நான்.

"தம்பி 'கூட்டம் அவையளுக்கு ஓட்டு எங்களுக்கு!? அதை மறந்து போகாதையுங்கோ..." –என்று மிக ஸிம்பிளாக – விட்டேத்தியாகப் பதில் தந்தார் அவர்.

அதீத நம்பிக்கை ஆளையே விழுத்திவிடும் என்ற அனுபவம் அவருக்கு இன்னும் கிட்டவில்லையோ என்று எனக்குள் எண்ணிக்கொண்டு என் உரையாடலை வெட்டினேன் நான்.

பட்டறிவு பெற நாம் இன்னும் ஒரு தேர்தல் வரை காத்திருக்க வேண்டும் என்று எனக்குள் கணக்குப் போட்டுக் கொண்டேன். நான் நினைப்பது சரிதானே வாசகர்களே...?

-மின்னல்-

## இலுப்பைக்கடவை விபத்தில் ஒருவர் பலி!

மன்னார் –இலுப்பைக் கடவைப்பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார் . இலுப்பைக் கடவையைச் சேர்ந்த 51 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார். விபத்து எப்படி ஏற்பட்டது என்ற தகவல்கள் வெளியாகவில்லை. உயிரிழந்தவரின் சடலம் முழங்காவில் வைத்தியசாலையில் இருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டது.

## தமிழ் தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச மகளிர் தின பெண்கள் எழுச்சி மாநாடு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமாகி நடைபெற்றது.

தமிழ்தேசிய மக்கள் முன்னணி மகளிர் பிரிவு தலைவியும் நல்லூர் பிரதேச சபை உறுப்பினருமான திருமதி வாசுகி சுதாகரன் தலைமையில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தின பெண்கள் எழுச்சி மாநாட்டின் ஆரம்ப நிகழ்வாக யாழ்ப்பாணம் முன்னியப்பர் ஆலய முன்றிலில் இருந்து பேரிகை இசை முழங்க விருந்தினர்கள் அழைத்துவரப்பட்டனர். உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிர் நீத்தவர்களின் நினைவுத் தூபிகளில் மலரஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

தொடர்ந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கொடியைக் கட்சித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஏற்றிவைத்தார். அதனையடுத்து மண்டபத்திற்குள் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர்.

மாவீரர் சோதியாவின் திருவுருவப்படத்திற்கு அவரது தாயாரும் தியாகத்தாய் அன்னை பூபதியின் திருவுருவப்படத்திற்கு அவரது பேர்த்தியாரும் விளக்கேற்றி மலர் மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து அகவணக்கம், மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து நிகழ்வில் பங்கேற்ற சுமார் ஆயிரத்து ஐந்நூறுக்கும் மேற்பட்ட மக்கள் எழுந்து நின்று ஒருமித்த குரலாய் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினர். அதனையடுத்து வரவேற்புரை, வாழ்த்துரை, தலைமையுரை என்பன நடைபெற்றன.

தொடர்ந்து மகளிர் எழுச்சிப் பிரகடனம் வாசிக்கப்பட்டது.

அதனையடுத்து இசை, நடனம் உள்ளிட்ட கலை நிகழ்வுகள் நடைபெற்றன. கலைநிகழ்வுகளில் பங்கேற்ற கலைஞர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி திருமதி ஜெயலக்சுமி இராஜநாயகத்தின் உரையைதத் தொடர்ந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணியினால் கிராமங்கள்தோறும் நடத்தப்பட்ட விளையாட்டு நிகழ்வுகளில் வெற்றி பெற்றோருக்கான கௌரவிப்பும் பரிசில் வழங்கலும் நடைபெற்றது.

அதனையடுத்து தங்கள் அயராத முயற்சியால் ஒவ்வொரு துறையிலும் சாதனை நிலைநாட்டிய சாதனைப் பெண்கள் கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது. தொடர்ந்து கல்வியில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில், க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தரத்தில் மாவட்ட மற்றும் தேசியநிலைகளில் முதன்மைப் பெறு பேறு பெற்றவர்களைக்கௌரவிக்கும் நிகழ்வும் இடம் பெற்றது.

தொடர்ந்து தமிழ்த் தேசியமக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சிறப்புரையாற்றினார்.

## நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்க 5 கட்சிகள் எதிர்ப்பு!

கொழும்பு, மார்ச் 04

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்கும் யோசனைக்கு ஐந்து அரசியல் கட்சிகள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

தேசிய சுதந்திர முன்னணி, பிவித்துரு ஹெல உறுமய, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஆகிய கட்சிகளின் முக்கியஸ்தர்கள் இந்த யோசனையை எதிர்த்துள்ளனர்.

இதனால் அண்மைய நாட்களில் ஜனாதிபதி முறைமை ஒழிப்பு தொடர்பில் கொண்டு வரப்பட்ட யோசனை அமுல்படுத்தப்படாது கிடப்பில் போடுவதற்கு அதிக வாய்ப் புக்கள் உண்டு எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

## யாழ் பல்கலை சட்ட மாணவர்களின் 'நீதம்' நூல் வெளியீட்டு விழா நேற்று




யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறை மற்றும் யாழ் பல்கலைக்கழக சட்ட மாணவர் சங்கம் முன்னெடுக்கும் 'நீதம் – 07' மலர் வெளியீட்டு விழா யாழ்.பல்கலைக் கழக மருத்துவ பீட மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது .

இந் நிகழ்வில் இலங்கையின் உயர்நீதிமன்ற நீதியரசர் சி.துரைராஜா பிரதம விருந்தினராகவும் , யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம சங்கர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

யாழ் மாவட்டத்தின் அனைத்து மாவட்ட நீதிமன்றங்களின் நீதிபதிகள் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி லெனின்குமார் ஆகியோரும் கலந்து கொண்டனர். அத்துடன் மூத்த சட்டவாளர்கள், சட்டபீட மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## நிறைவேற்றதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்தால் அதற்கு நாம் முழுமையான ஆதரவை வழங்குவோம். ஆனால் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு இது சரியான தருணமல்ல என அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில் –

நிறைவேற்று அதிகாரத்தை நீக்கும் சரியான தருணம் இது அல்ல. இப்போது ஜனாதிபதித் தேர்தல் ஒன்றுக்கான காலகட்டம் நிலவி வருகின்ற நிலையில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவது என்பது சரியானதல்ல. ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறவேண்டும் என்ற நோக்கத்தில் சிலர் இதனைக் கையில் எடுக்கப் பார்க்கின்றனர். அதிகார பரவலாக்கல் குறித்து ஏதேனும் திருத்தங்கள் கொண்டு வந்து அரசியல் முரண்பாடுகளுக்கு தீர்வை எட்ட நினைத்தால் அதற்கு நாம் ஒத்துழைப்பு வழங்க தயாராக உள்ளோம்.

ஆனால் இப்போது நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை கையில் எடுக்க வேண்டாம். இது ஒரு சிலரது தனிப்பட்ட தேவைக்காக மட்டுமே கையாளப்படுகின்றது. ஆகவே அதற்கு ஆதரவு வழங்க போவதில்லை –என்றார். (ஐ)

**அர்ச்சனா வெல்டிங் வேக்ஸ்**

அனைத்து விதமான வெல்டிங் வேலைகளும் உரிய தவணையில் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு – சூட்டி (0768495917) கொக்குவில்.

# புதிய பிரேரணையில் தனது செயற்திட்டத்தை ஐ.நாவுக்கு கொடுக்கவேண்டும் இலங்கை

## உலக தமிழர் பேரவை வலியுறுத்து

ஜெனீவா, மார்ச் 04

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்படவுள்ள புதிய பிரேரணையை நடைமுறைப்படுத்தும்செயற்பாடு குறித்து இலங்கை அரசுநிகழ்ச்சி நிரலை வழங்கவேண்டும் என உலகத் தமிழர் பேரவை வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் போர் முடிவடைந்து 10 வருடங்களாகியும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படாமையானது நீண்டகால பாதிப்புக்களுக்கு வழியை ஏற்படுத்திவிடும் எனவும் உலகத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

உலக தமிழர் பேரவை விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

யுத்தம் முடிவடைந்ததில் இருந்து கிட்டத்தட்ட 10 ஆண்டுகள் ஆகிறது. இதன் காரணமாக தமிழ் சமூகம் மிகவும் ஆழமான தாக்கத்தை அனுபவித்தது. குறிப்பாக கொலை, இடம் பெயர்வு மற்றும் வலிந்து இடம் பெயர வைத்தல் போன்ற சம்பவங்களில் இருந்து ஒரு குடும்பம் கூட பாதிக்கப்படாமல் இல்லை.

போரின் இறுதிக்கட்டத்தில் பல்வேறுபட்ட துயரச் சம்பவங்கள் அரங்கேறியன. அவற்றை மறைக்க இலங்கை அரசும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால் யுத்தம் முடிந்தபின், காட்டுமிராண்டித்தனமான சம்பவங்கள் அனைத்தும் வீடியோக்கள், புகைப்படங்கள் மற்றும் அறிக்கைகள் ஆகியன மூலம் வெளிச்சத்துக்கு வந்தன.

குறிப்பாக முறைகேடான வன்முறைகளான போர்க்காலத்தில் சரணடைபவர்கள், மருத்துவமனைகள் மற்றும் பாதுகாப்பான பகுதிகளில் கண்மூடித்தனமாக ஷெல் வீச்சு தாக்குதல், மனிதாபிமான உதவிகள் மறுப்பு என்பன இடம்பெற்றன.

இதன்போது பொதுமக்களை பாதுகாப்பதற்காக 2009 இல் ஐ.நா. மோசமாக தோல்வி அடைந்தபோதிலும், இந்தத் தோல்வியைத் தீர்க்கும் வகையில் அவர்கள் எடுத்த முயற்சிகள் பாராட்டுக்குரியவை.

இந்த நிலையில் சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கு மத்தியில் கொண்டு வரப்பட்ட ஐக்கிய நாடுகளின் பரிந்துரைகள் 30/1 மற்றும் 34/1 ஆகியவற்றின் அனைத்து அம்சங்களையும் முழுமையாக விதிவிலக்கு இன்றி இணை அனுசரணையாளராக இருந்து நிறைவேற்றஇலங்கை உடன் பட்டது.

எனினும் இன்னும் இலங்கை அரசு தமது உறுதிமொழியை நிறைவேற்றவில்லை. பயங்கரவாத தடைச் சட்டத்துக்குப் பதிலாக புதிய சர்வதேச நியம சட்டம் ஒன்று கொண்டு வரப்படவில்லை. காணாமல் போனோர் அலுவலகம் அமைக்கப்பட்ட போதும் அது நீதி நடைமுறைகளை இன்னும் ஆரம்பிக்கவில்லை.

போர்க்குற்ற விசாரணைகளுக்கு சர்வதேச நீதிபதிகள் இணைக்கப்படக்கூடாது என்று தொடர்ந்தும் இலங்கையின் அரசாங்கங்கள் வலியுறுத்தி வருகின்றன.

இந்நிலையில் ஐக்கிய நாடுகளின் இணை அனுசரணையில் இருந்து இலங்கையை விலக்கிக்கொள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானம் எடுக்கின்றார் எனக் கூறப்படும் முயற்சிகளும் உண்மைகளை கூறி இரண்டு தரப்பும் மன்னிப்பைக் கோர வேண்டும் என்ற நிலைப்பாடு பயங்கரமான சூழ்நிலையை ஏற்படுத்தும்.

போர்க்குற்ற விசாரணைகளைத் தடுத்து சர்வதேசத்தின் முயற்சிகளை பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளாகவே இந்த முயற்சிகள் அமையும்.

எனவே புதிதாகக் கொண்டு வரப்படவுள்ள பிரேரணையைச் செயற்படுத்த எடுக்கும் காலம் தொடர்பான செயற்திட்டத்தை இலங்கை அரசு வழங்க வேண்டும்.

அத்தோடு அதனை நடைமுறைப்படுத்துவது சிறப்பு அறிக்கையாளரினால் அல்லது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினால் கண்காணிக்கப்படவேண்டும் - என்றுள்ளது.

(ஐ)

# மூன்று கோடி ரூபா பெறுமதியான வலம்புச்சங்குடன் ஒருவர் கைது!

## யாழ்ப்பாணத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டதாம்



கொழும்பு, மார்ச் 04

யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட வலம்புரிச் சங்குடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பதுளை - ஹாலிஎல, உடுவர பிரதேசத்தில் உள்ள தேயிலைத் தோட்டத்தில் வைத்து மூன்று கோடி ரூபா பெறுமதியான இந்த வலம்புரிச் சங்கு பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இதன்போதே 40 வயதான சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊவா மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது இந்த வலம்புரிச் சங்கு கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படும் இந்த வலம்புரிச் சங்கு, லயன் அறை ஒன்றில் உள்ள அரிசி பெட்டிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு பொதுவான நபர் ஒருவரை அனுப்பி, இந்த வலம்புரிச் சங்கைக் கைப்பற்றியதாகவும் பொலிஸார் கூறினர்.

# ஆசிரியர்களை தாக்கியோருக்கு எதிராக விசாரணை வேண்டும்!

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

பத்தரமுல்ல கல்வி அமைச்சுக்கு முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பாக விசாரணைகளை முன்னெடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கையை இலங்கை ஆசிரியர் சங்கம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் முன்வைத்துள்ளது. இது குறித்து எழுத்துமூலம் ஜனாதிபதிக்கு அறிவிக்கவுள்ளதாக சங்கத்தின் பிரதம செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

இந்த விடயத்துக்கு பொறுப்பான அமைச்சருக்கு நெருங்கியவர்கள், கல்வி அமைச்சுக்குள் இருந்து இவ்வாறான தாக்குதல்களைத் தம் மீது மேற்கொண்டனர் என அவர் குற்றம் சுமத்தினார்.

கடந்த 28 ஆம் திகதி ஆசிரியர் சங்கங்கள் சில ஒன்றிணைந்து கல்வி அமைச்சுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தன.

ஆசிரியர், அதிபர்களுக்கான சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் உள்ளிட்ட பல சங்கங்கள் ஒன்றிணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தன. இந்த ஆர்ப்பாட்டத்தைக் கலைப்பதற்கு பொலிஸார் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகைப் பிரயோகங்களை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# இலங்கையின் புதிய வரைபடம் இம்மாத இறுதியில் வருகிறது!

இலங்கையின் புதிய வரைபடத்தை வெளியிடும் பணிகளில் ஈடுபட்டுள்ளதாக புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. கொழும்பு துறைமுக நகர திட்டம், அம்பாந்தோட்டைத் துறைமுக திட்டங்களின் பின்னர் இலங்கை வரைபடத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை உள்ளடக்கியதாக புதிய வரைபடமே வெளியிடப்படவுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளின் பின்னரானமாற்றங்களைஉள்ளடக்கியதாக இந்த வரைபடம் தயாராகி வருகிறது.

கொழும்புத் துறைமுக நகரம், அம்பாந்தோட்டைத் துறைமுகம், மொரகஹகந்த நீர்ப்பாசனத் திட்டம் போன்ற பிரமாண்ட திட்டங்களாலேயே புதிய வரைபடம் வெளியிடப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்களினால் நிலப்பரப்பிலும், கடலோரத்திலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

கடந்த ஐந்து ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட அதிவேக வீதி, மற்றும் இதர அபிவிருத்தித் திட்டங்கள் இந்த வரைபடத்தில் உள்ளடக்கப்படும்.

இந்த வரைபடம் செயற்கைக்கோள் படங்களின் உதவியுடன் தயாராகி வருகிறது. இதற்கு முந்தைய வரைபடங்கள் வான்வழியாக எடுக்கப்பட்ட புகைப்படங்களின் உதவியுடனே தயாரிக்கப்பட்டிருந்தன. இந்த மாத இறுதியில் இந்த வரைபடம் வெளியாகும். (ஐ)

# புதிய தொகுதி அமைப்பாளர்கள் ஜனாதிபதி மைத்திரியால் நியமனம்

கொழும்பு, மார்ச் 04

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தொகுதி அமைப்பாளர்களுக்கு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை மறுசீரமைக்கும் செயற்பாட்டின் கீழ் இந்த நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

ஜனாதிபதி செயலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதற்கமைய புதிய தொகுதி அமைப்பாளர்களின் பெயர் விவரங்கள் பின்வருமாறு:

**கொழும்பு மாவட்டம்:**

பைஸர் முஸ்தபா – மத்திய கொழும்பு தொகுதி, இசுர தேவப்பிரிய - மஹரகம தொகுதி, காமினி திலக்கசிறி - ஹோமாகம தொகுதி, பிரசன்ன சோலங்க ஆரச்சி – கொலன்னாவ தொகுதி, ஜனக்க ரணவக்க - கோட்டே தொகுதி, கீர்த்தி உடவத்த - தெஹிவளை தொகுதி, சுமித் சொய்ஸா - அவிசாவளை தொகுதி, மொஹம்மட் மன்ஸில் - கொழும்பு மேற்கு தொகுதி.

**மாத்தறை மாவட்டம்**

விஜய தஹநாயக்க - தெனியாய தொகுதி, சந்திம ராசபுத்திரி – மாத்தறை தொகுதி, ஹேமால் குணசேகர – வெலிகம தொகுதி, நிலங்க ஹெந்தாவிதாரண– தெவிநுவர தொகுதி

**காலி மாவட்டம்**

ஷான் விஜயலால் டி சில்வா– அம்பலாங்கொடை தொகுதி, நிாந்த முத்துஹெட்டிகம – பத்தேகம தொகுதி, தயாரத்ன டி சில்வா - பலப்பிட்டி தொகுதி, அமில கர்ன காரியவசம் - பெந்தர எல்பிட்டிய தொகுதி, சுசந்த லால் ஜயவீர - ஹரந்தெனிய தொகுதி, திசர குணசிங்க – ஹபராதுவ தொகுதி, மொத்சறி டி சில்வா – காலி தொகுதி, அசங்க மெண்டிஸ் குணசேகர– ரத்கம தொகுதி, திருமதி சம்பிக்கா நிரஞ்ஜலி – ஹினிதும தொகுதி (இணை), பி.குருசிங்க – ஹினிதும தொகுதி (இணை)

**பதுளை மாவட்டம்**

நிமல் சிறிபால டி சில்வா - பதுளை தொகுதி, டிலான் பெரேரா – ஹாலியெல தொகுதி, சாமர சம்பத் தஸநாயக்க - பசறை தொகுதி, டாக்டர் ரோஹண புஷ்பகுமார – பண்டாரவளை தொகுதி, எஸ்.ஏ. ஆர்.பந்துசேன – வெலிமட தொகுதி, ரவி குணவர்தன – வெலிமட தொகுதி (இணை), கே.பி.குணவர்தன - மஹியங்கனை தொகுதி, ரசிக்க தேசப்பிரிய ரத்நாயக்க - பதுளை மாவட்ட அமைப்பாளர், மொஹம்மது இல்யாஸ் - பதுளை மாவட்ட அமைப்பாளர் (முஸ்லிம் பிரதேசம்)

**கண்டி மாவட்டம்**

தி.மு.ஜயரத்ன - கம்பளை தொகுதி, எஸ்.பி.திசாநாயக்க - ஹேவாஹெட்ட தொகுதி, எதிரிவீர வீரவர்த்தன - ஹாரிஸ்பத்துவ தொகுதி, மஹிந்த அபேகோன் - கண்டி தொகுதி, லின்டன் விஜயசிங்க – தெல்தெனிய தொகுதி, சமரஜீவ பண்டார வெலகெதர - பாத்ததும்பற தொகுதி

**நுவரெலியா மாவட்டம்**

டபிள்யு.ஜீ. ரணசிங்க - மஸ்கெலிய தொகுதி, நாரத பண்டார திசாநாயக்க - ஹங்குரன்கெத்த தொகுதி (இணை), ஜகத் சமரஹேவா – வலப்பனை தொகுதி

**இரத்தினபுரி மாவட்டம்**

அத்துல ராஹுபத்த - பெல்மதுல்ல தொகுதி, பிரபாத் பானு மனுப்பிரிய - பலாங்கொடை தொகுதி, மியுரு பாஷித்த தியனகே- நிவிதிகல தொகுதி, சலித்த கருணாரத்ன – கலவான தொகுதி, ஷாந்த ரத்நாயக்க -கொலொன்ன தொகுதி, உபாலி சந்திரசேன - ரக்குவானை தொகுதி, சரத் சந்தநாயக்க– எஹெலியகொடை தொகுதி.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## ஜெனீவா இக்கட்டு

ஜெனீவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத் தொடர் தொடர்பில் காத்திரமான - சாணக்கியமான - இராஜதந்திரமான - ஒரு முடிவை எடுக்க வேண்டிய கட்டாயத்துக்குள் தமிழர் தரப்பு - குறிப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமை - தள்ளப்பட்டிருக்கின்றது.

ஜெனீவா அமர்வை ஒட்டித் தென்னிலங்கையில் கட்ட விழும் அரசியல் நகர்வுகளை மிக உன்னிப்பாக அவதானித்துச் செயற்படவேண்டிய கட்டாய நிலையில் தமிழர் தரப்பு இருக்கின்றமையை நாம் மறந்துவிடக் கூடாது.

ஜெனீவா மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை விவகாரம் தொடர்பில் இலங்கையும் சேர்ந்து அனுசரணைப் பணி வகித்துக் கொண்டு வந்து நிறைவேற்றிய இரண்டு தீர்மானங்களில் இருந்தும் - அனுசரணைப் பணியில் இருந்தும் - விலகுவது குறித்து இலங்கை தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றது 'என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே கடந்த வாரம் மூத்த ஆங்கிலப் பத்திரிகையாளர் ஒருவரிடம் கூறியிருந்தார்.

ஆனால், இலங்கை விவகாரம், இப்போது இலங்கை ஜனாதிபதியின் கைகளையும் மீறி நகர்வதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் ஆகியன தொடர்பில் சர்வதேசப் பங்களிப்புடனான ஒரு நீதிமுறைமையின் கீழ் உண்மைகளைக் கண்டறிதல், பொறுப்புக் கூறலை நிலைநாட்டுதல் மற்றும் மீள நிகழாமையை உறுதிப்படுத்தல், நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல், இழப்பீடுகளை வழங்குதல் ஆகியவற்றை வலியுறுத்தும் தீர்மானமே 2015 செப்ரெம்பரிலும், பின்னர் இந்த அடிப்படையிலான சர்வதேசக் கண்காணிப்பை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கும் அடுத்த தீர்மானம் 2017 செப்ரெம்பரிலும் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டன. அந்தத் தீர்மானங்களுக்குத் தானும் சேர்ந்து வழங்கிய இணை அனுசரணையிலிருந்தும், அந்தத் தீர்மானத்திலிருந்தும் விலகுகின்றமை குறித்தே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், அவரின் தீர்மானத்தையும், முடிவுகளையும் மீறி இலங்கைத் தரப்பின் நிலைப்பாடு முன்னெடுக்கப்படுவதாக விடயமறிந்த கொழும்பு வட்டாரங்கள் தகவல் வெளியிடுகின்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவ்விடயங்களை ஒட்டி நேரடியாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரவிநாத் ஆரியசிங்கவுடன் கலந்துரையாடி, வழிகாட்டுதல்களை வழங்குகின்றாராம்.

ஆனால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், அவரின் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனவும், மேற்படி தீர்மானங்களில் இருந்து விலகும் கருத்து நிலைப்பாட்டில் இல்லை. அதுமட்டுமன்றி, இந்த மாதத்தில் இலங்கை தொடர்பாக வரக்கூடிய புதிய பிரேரணைக்கும் இலங்கை தொடர்ந்தும் அனுசரணைப் பணி வகித்து, சர்வதேசத்துடன் சேர்ந்து இயங்க வேண்டும் என்பதே அவர்கள் இருவரின் நிலைப்பாடாகவும் உள்ளது என்பதும் தெரிய வருகின்றது.

அதனால், இலங்கை தொடர்பாக ஜெனீவாவில் புதிதாக வரக்கூடிய பிரரேரணை விடயத்திலும், அதைச் சேர்ந்து முன்னிறுத்தி, அனுசரித்து, இணை அனுசரணை வழங்கி, அதில் பங்காளியாகிக் கொள்ளுமாறு ஜெனீவாவில் உள்ள இலங்கைப் பிரதிநிதிக்கு பிரதமரும், வெளிவிவகார அமைச்சரும் வழிகாட்டுதல் மற்றும் பரிந்துரை, ஆலோசனை வழங்கியுள்ளனர் என்றும் தெரிகின்றது.

வெளிவிவகார அமைச்சரின் வழிகாட்டுதல் படி செயற்பட வேண்டிய ஜெனீவாவில் ஐ.நாவுக்கான இலங்கைப் பிரதிநிதி, அதன் காரணமாக, மேற்படி அனுசரணைப் பணியிலிருந்து விலக முடியாத இக்கட்டில் இருக்கின்றார் எனக் கூறப்படுகின்றது.

ஒரு பக்கம் பிரதமரும் அவரின் வெளிவிவகார அமைச்சரும். மற்றப் பக்கத்தில் ஜனாதிபதியும் அவரின் வெளிவிவகார அமைச்சின் செயலாளரும்.

இந்த இரண்டு தரப்புகளுக்கும் இடையில் ஜெனீவா விவகாரத்தில் இலங்கை நிலைப்பாடு பந்தாடப்பட்டு வருவது போல இழுபடுகின்றது எனக் கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன.

இவற்றுக்கு மத்தியில் வெறும் உணர்ச்சி அரசியலுக்காக - கோஷங்களுக்கு முன்னுரிமை கொடுத்துத் தீர்மானங்களை எடுக்காமல், சர்வதேச மற்றும் தேசிய மட்ட அரசியல்கள நிலைவரங்களையும் விளைவுகள் பற்றிய ஊகங்களையும் கணக்கில் எடுத்து, அரசியல் ரீதியாகவும், யதார்த்த பூர்வமாகவும் சாதக பாதங்களைப் பரிசீலித்து, சாணக்கியமாக தமிழர் தரப்பு முடிவுகளை - தீர்மானங்களை - எடுக்க வேண்டும்.

விரைவில் வரக்கூடிய தேர்தல்களை இலக்கு வைத்து - வாக்குச் சுருட்டலுக்காக மட்டும் வெற்றுக் கோஷங்களுக்குப் பின்னால் அணி திரண்டு - சாத்தியமற்ற, வாய்ப்பற்ற வழியில் விடயங்களை நகர்த்த முற்படாமல், பொறுப்புடன் தமிழர் தரப்பு - குறிப்பாகக் கூட்டமைப்புத் தரப்பு - தீர்மானங்களை எடுக்க வேண்டும்; எடுக்க வேண்டியிருக்கும்.

ஜெனீவா விடயங்களைக் காட்டித் தமிழர் தரப்பின் ஐக்கியத்தைப் பிளக்கும் கைங்கரியம் கனகச்சிதமாக ஒப்பேற்றப்பட்டுக் கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் -

தீர்க்க தரிசனத்தோடு தெளிவான தீர்மானங்களை எடுத்து அறிவித்து செயற்படுத்த வேண்டிய கட்டாயம் தமிழ் தலைமைகள் மீது வீழ்ந்துள்ளது.

அவர்கள் என்ன செய்யப் போகின்றார்கள்?

# முஸ்லிம்களின் பிரச்சினைகளை தீர்க்க புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும்

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் வேண்டுகோள்



அனுராதபுரத்தில் காணிப் பிரச்சினை உட்பட, மாற்றுமத சகோதரர்கள் மத்தியிலும் முரண்பாடுகள் இருந்து வருகின்றன. மாற்று சமூகத்தினருடன் புரிந்துணர்வு அடிப்படையில் எங்களது பிரச்சினைகளை புத்திசாதுரியத்துடன் தீர்த்துக்கொள்ள வேண்டும் எனஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சின் நிதியின் 77 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் சிறிய நகர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நேற்று முன் தினம் காபெட் வீதியாக அபிவிருத்தி செய்யப்பட்ட மிஹிந்தலை - கடுகெலியாவ வீதியை திறந்து வைத்தபின் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேலும் கூறியவை வருமாறு:

கடந்த 5 வருடங்களாக அனுராதபுர மாவட்டத்தில் நலிவடைந்த எங்களது கட்சியை மீள நிறுத்தியிருக்கிறோம். கடந்த உள்ளூராட்சி தேர்தலில் தனித்து மரச் சின்னத்தில் போட்டியிட்டு 7 உறுப்பினர்களை வென்றிருக்கிறோம். சமூகத்தின் வளர்ச்சிக்காகவும், நாட்டின் ஈடேற்றத்துக்காகவும் உழைக்கின்ற இயக்கமாக எங்களது போக்கை வகுத்துக்கொள்ள வேண்டும். இதன் முதற்கட்டமாக நாடு முழுவதும் கட்சிக் கிளைகளை புனரமைப்பதுடன், இளைஞர் காங்கிரஸையும் மாதர் காங்கிரஸையும் வளர்ப்பதில் நாங்கள் முன்னேற்றம் கண்டு வருகிறோம்.

அனுராதபுரத்தில் காணிப் பிரச்சினை உட்பட, மாற்றுமத சகோதரர்கள் மத்தியிலும் முரண்பாடுகள் இருந்து வருகின்றன. நாங்கள் அவற்றை மிகவும் சாணக்கியத்துடன் கையாண்டு, அதனை தீர்க்கின்ற வேலைகளை பக்குவமாக கையாண்டு வருகிறோம். வன இலாகா, வன விலங்கு திணைக்களம், தொல்லியல் திணைக்களம் போன்றவற்றால் பல புதிய பிரச்சினைகள் உருவாக்கப்படுகின்றன. இதனால் நாட்டில் சம பிரஜைகளால் வாழ்வதில் பல சிக்கல்களை நாங்கள் எதிர்நோக்கி வருகிறோம்.

இவற்றை தீர்ப்பதற்கான வழிமுறைகளை நாங்கள் கண்டறிய வேண்டும். நாட்டிலுள்ள சகல இனங்களுக்கும் மத்தியில், முஸ்லிம்களும் சுயநிர்ணயத்துடன் தலை நிமிர்ந்து வாழவேண்டும். மாற்று சமூகத்தினருடன் புரிந்துணர்வு அடிப்படையில் எங்களது பிரச்சினைகளை புத்திசாதுரியத்துடன் தீர்த்துக்கொள்ள வேண்டும். இந்த விடயங்கள் தொடர்பில் ஆழமான கலந்துரையாடல்கள் இடம்பெறவேண்டும்.

சீரான வடிகாலமைப்பு வசதிகள் இல்லாமையால், பாடசாலையை அண்டிய பிரதேசங்களில் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்கின்றனர். இதனை நிவர்த்திப்பதற்கான ஒதுக்கீட்டை இந்த வருடத்துக்குள் ஒதுக்கித் தருவதற்கு தீர்மானித்துள்ளேன் - என்றார்.

# 11 தமிழர் கடத்தல் வழக்கை விசாரிக்க 'ட்ரயல் அட் பார்'

## சட்ட மா அதிபர் திணைக்களம் திட்டம்

கொழும்பு, மார்ச் 04

முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட உள்ளிட்ட கடற்படை அதிகாரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள 11 தமிழர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட குற்றச்சாட்டு வழக்கை மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவர் அடங்கிய சிறப்பு தீர்ப்பாயம் (ட்ரயல் அட் பார்) முன்னிலையில் நடத்த சட்ட மா அதிபர் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

இந்த வழக்கை அறங்கூறும் சபை (ஜூரி) முன்னிலையில் நடத்தப்படாமல், சிறப்பு தீர்ப்பாயம் முன்னிலையில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

2008 - 09 காலகட்டத்தில் கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை குற்றப் புலனாய்வுத் திணைக்கள கூட்டுக் கொள்கை குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிசாந்த டி சில்வா தலைமையிலான குழு முன்னெடுத்து வருகிறது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் கடற்படைத் தளபதியும் பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியுமான அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன, முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் கரன்னகொட, கொமடோர் டி.கே.பி.தசநாயக்க, நேவி சம்பத் உள்ளிட்ட 15 இற்கும் மேற்பட்ட கடற்படையினர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்த வழக்கை மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவர் அடங்கிய சிறப்பு தீர்ப்பாயம் (ட்ரயல் அட் பார்) முன்னிலையில் நடத்த சட்ட மா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது என சண்டே ரைம்ஸ் ஆங்கில வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, இந்த வழக்குத் தொடர்பாக அட்மிரல் கரன்னகொடவிடம், வாக்குமூலம் ஒன்றைப் பெற்று கொள்ளும், குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. அவர் தனது முகவரிகளில் வசிக்காமல் தலைமறைவாகியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் தன்னைக் கைது செய்வதைத் தடுக்கும் வகையில் அட்மிரல் கரன்னகொட, உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவைத் தாக்கல் செய்திருந்தார். அந்த மனு கடந்த வாரம் உயர் நீதிமன்ற அமர்வால் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அதன்போது பிரதிவாதியான சட்ட மா அதிபர் சார்பில் முன்னிலையான சொலிஸ்ட்டர் ஜெனரல், அட்மிரல் கரன்னகொட கைது செய்யப்படமாட்டார் என உறுதியாகத் தெரிவிக்க முடியாது என்று சமர்ப்பணம் செய்தார்.

இந்த நிலையில் மனு மீதான விசாரணையை உயர் நீதிமன்றம் ஒத்திவைத்தது. (ஐ)

# போதைப்பொருளுடன் வெளிநாட்டவர்கள் கைது!

கொழும்பு, மார்ச் 04

கொக்கேய்ன் போதைப் பொருளுடன் வெளிநாட்டவர்கள் இருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

26 வயதுடைய நைஜீரியா நாட்டவர்கள் இருவரும் 40 வயதுடைய மொரட்டுவ பகுதியை சேர்ந்த ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

## நாளை

05.03.2019
செவ்வாய்க்கிழமை
நட்சத்திரம்: அவிட்டம் பி.ப 4.10 வரை
திதி : சதுர்த்தசி மு.இ 8.02 வரை
சுபநேரம் : 10.56 – 12.26 வரை
இராகுகாலம் : 3.26 – 4.56 வரை

# ஜே.வி.பியின் யோசனைக்கு திகாம்பரம் கடும் எதிர்ப்பு

கொழும்பு, மார்ச் 04

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை முற்றாக இல்லாதொழிக்கக்கோரும் அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டவரைவுக்கு தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரான அமைச்சர் பழனி திகாம்பரமும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி முறைமை நீடிக்கவேண்டும். அது சிறுபானமையின மக்களுக்கு அனுகூலமாக அமைந்துள்ளது. எனவே, குறித்த யோசனை கைவிடப்படவேண்டும் என திகாம்பரம் வலியுறுத்தினார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை முற்றாக இல்லாதொழிக்ககோரும் 20 ஆவது திருத்தச் சட்டவரைவுக்கு அரசியல் கட்சிகளின் ஆதரவை திரட்டும் முயற்சியில் ஜே.வி.பி. தீவிரமாகக் களமிறங்கியுள்ளது.

இதற்கு ஐக்கிய தேசியக்கட்சி பச்சைக்கொடி காட்டியுள்ள நிலையில், நாளை எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்தவை நேரில் சந்தித்து ஆதரவு கோரவுள்ளது ஜே.வி.பி.

'20' இற்கு எதிராக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன போர்க்கொடி தூக்கியுள்ளது. அமைச்சர் மனோ கணேசனும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். அமைச்சர்களான ஹக்கீம், ரிஷாத், சம்பிக்க ஆகியோரும் ஆதரவு வழங்கமாட்டார்கள் எனவும் மனோ கூறியிருந்தார்.

இந்நிலையிலேயே அமைச்சர் திகாம்பரமும் தனது நிலைப்பாட்டை அறிவித்துள்ளார். (ஐ)

# ரயிலுடன் மோதி 67 பேர் மரணம்!

கொழும்பு, மார்ச் 04

இவ்வருடத்தின் முதல் இரு மாதங்களில் ரயிலுடன் மோதி இதுவரை 67 பேர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர், ரயில் பாதையில் நடந்துசென்றவர்கள் என ரயில் பாதுகாப்பு அதிகாரி அனுர பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த வருடத்தில் ரயிலில் மோதி 570 பேர் உயிரிழந்துள்ளனர்.

ரயில் பாதையில் பயணிப்பதானது, ரயில்வே திணைக்களத்தின் சட்டத்தின்படி, தண்டனைக்குரிய குற்றமாகும்.

இதனால் ரயில் பாதையில் பயணிப்பதைத் தவிர்க்குமாறும் ரயில்வே திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

பெரும்பாலான கட்டடங்கள், தனியார் வகுப்புகள் ரயில் பாதையை அண்மித்து காணப்படுவதும், ரயில் விபத்துக்களுக்கான காரணம் என ரயில் பாதுகாப்பு அதிகாரி அனுர பிரேமரத்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, ரயில் பாதையில் சென்ற இருவர் கடந்த சனிக்கிழமை ரயிலில் மோதி உயிரிழந்தனர்.

பாடசாலை மாணவர் ஒருவரும் பாடசாலை மாணவியுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

கொழும்பு – கோட்டையிலிருந்து எல்ல நோக்கி பயணித்த ரயிலிலேயே இவர்கள் மோதுண்டு உயிரிழந்துள்ளனர்.

(ஐ)

## 7 வயதுச் சிறுமி துஷ்பிரயோகம்; இரண்டு சிறுவர்கள் கைதாகினர்

7 வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் 14 மற்றும் 15 வயதுடைய சிறுவர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமி கல்வி கற்கும் பாடசாலை நிர்வாகத்தால் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் விசாரணைகளின் பின்னர் சிறுவர்கள் இருவரும் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் கூறினர்.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இடத்தில் அயல் வீட்டில் வசிக்கும் 7 வயதுச் சிறுமி ஒருவரை அழைத்துச்சென்று சிறுவன் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளனர். அவனுடன் மற்றொரு சிறுவனும் இணைந்தே சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளனர். அருகிலுள்ள ஆலயம் ஒன்றுக்குச் சிறுமியை அழைத்துச் சென்று சிறுவர்கள் இருவரும் இவ்வாறு துஷ்பிரயோகத்துக்குட்படுத்தியுள்ளனர்.

சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இந்த நிலையில் கடந்த வாரமே சிறுமி, பாடசாலையில் இந்த விடயத்தைத் தெரியப்படுத்தினார். அது தொடர்பில் பாடசாலை நிர்வாகத்தால் கொடிகாமம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. அதனடிப்படையில் சிறுமி மருத்துவப் பரிசோதனைக்காகச் சட்ட மருத்துவ அதிகாரியிடம் முற்படுத்தப்பட்டார்.

சிறுமி 5 தடவைகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனச் சட்ட மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. அது தொடர்பில் சிறுமியிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அவரது அயல் வீட்டில் வசிக்கும் 14 வயதுச் சிறுவன் மற்றுமொரு 15 வயதுச் சிறுவன் என இருவர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ)

## சிவராத்திரி தினத்தையொட்டி எதிர்க்கட்சித் தலைவரின் செய்தி



மஹாசிவராத்திரி தினத்தையொட்டி எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ ஊடகங்களுக்கு செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார். அந்தச் செய்தியில் –

இந்து மக்கள் சிவபெருமானை வழிபடும் பொருட்டு விரதமிருந்து வருடம் தோறும் கொண்டாடுகின்ற புனித மஹா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். உலகவாழ் இந்து மக்கள் சிவபெருமானின் அருட்கடாட்சத்தைப் பெறுவதற்காக விரதமிருந்து, பூஜைகள் செய்து வழிபட்டு பக்தியுடன் இவ்விழாவைக் கொண்டாடுகின்றனர்.

இலங்கை அமைதியையும் சமாதானத்தையும் விரும்பக்கூடிய சமூகத்தைக் கொண்டுள்ளது. எனவே ஒருவருக்கொருவர் மதிப்பளிப்பதன் மூலம் கட்டியெழுப்பப்படுகின்ற ஒற்றுமையை மேம்படுத்தி சமய நம்பிக்கைகளுக்குள்ள சுதந்திரத்தின் ஊடாக பெரும் பணியொன்றை நிறைவேற்ற முடியும். இந்து மதத்தில் காணப்படுகின்ற சிறந்த அனுஷ்டானங்களும் விழாக்களும் எமது மக்களை ஒற்றுமைப்படுத்துவதுடன் மாத்திரமின்றி இலங்கை மக்களிடையே பரஸ்பர புரிந்துணர்வை வலுப்படுத்திக்கொள்வதற்கும் துணை புரிகின்றது.

மக்களிடையிலான ஒற்றுமை மற்றும் இணக்கப்பாடு என்பவற்றை கட்டியெழுப்புவதற்கு காரணமாக அமைகின்ற, பொறுமை, அமைதி என்பவற்றினை மேம்படுத்துகின்ற, உயர் மதங்களையும் கலாசாரங்களையும் கொண்டுள்ள நாம் பெருமை மிக்க தேசத்தின் மக்களாக விளங்குகின்றோம்.

எனவே, இப்புனித மஹா சிவராத்திரி தினத்தில் சமய அனுஷ்டானங்களில் ஈடுபடுகின்ற அனைவருக்கும் இறைவனின் அருட்கடாட்சமும் அருளும் கிட்ட வேண்டும் எனவும், சுபீட்சம் மற்றும் ஒற்றுமை என்பவற்றின் தாற்பரியத்தை பிரதிபலிக்கச் செய்கின்ற விழாவொன்றினைக் கொண்டாடுவதற்கு வாய்ப்புக்கிட்ட வேண்டும் எனவும் நான் பிரார்த்திக்கின்றேன். அனைத்து சமூகங்களுக்கு இடையிலும் நட்புறவு மிக்க அன்புகலந்த உறவுகள் வலுவடைந்து சமாதானமாகவும் ஒற்றுமையாகவும் வாழ்வதற்குரிய காலமொன்று உருவாக வேண்டுமென நாம் பிரார்த்திக்கின்றோம். இதனூடாக முழுநாட்டிற்கும் நன்மை பயக்கட்டும் – என்றுள்ளது. (இ)

## மட்டக்களப்பில் முருகபூபதியின் நூல்கள் அறிமுகம்

படைப்பிலக்கியவாதியும் ஊடகவியலாளருமான லெ. முருகபூபதி எழுதிய சொல்ல வேண்டியகதைகள் மற் றும் சொல்லத்தவறியகதைகள் ஆகிய நூல்களின் அறிமுகவிழாவை மட் டக்களப்பில் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு "கா" இலக்கிய வட்டமும் அரங்கம் வாரஇதழும் இணைந்து நடத்துகின்றன.

மட்டக்களப்பு – பார் வீதியில் 227ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள அரங்கம் கேட்போர் கூடத்தில் அரங்கம் ஆசிரியர் பூபாலரத்தினம் சீவகன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழா, திருமதி ம. விஜயேஸ்வரியின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகும்.

மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவர் புரவலர்வி. ரஞ்சிதமூர்த்தி பிரதமவிருந்தினராக கலந்து கொள்ளும் இவ்விழாவில் தகைமைசார் பேராசிரியர் செ. யேகராசா, சமூக கலை இலக்கிய வெளியில் முருகபூபதி என்ற தலைப்பில் உரையாற்றுவார்.

கிழக்கு பல்கலைக்கழக மாணவி டிலோஷினி மற்றும் வி. கௌரிபாலன், செல்வி நிலாந்தி சசிக்குமார் ஆகியோர் நூல் மதிப்பீட்டுரைகளை நிகழ்த்துவர். நூல்களின் ஆசிரியர் முருகபூபதி ஏற்புரையும் சொ. பிரசாத் நன்றியுரையும் நிகழ்த்துவர். (இ)

## மின்தடை



யாழ்ப்பாணம், மார்ச் 04

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை –

**யாழ் பிரதேசத்தில் -**

மணற்காடு, வலிகண்டி, மணற்காடு நீர்ப்பாசன சபை ஆகிய இடங்களிலும் –

**வவுனியா பிரதேசத்தில் -**

பட்டாணிச்சூர் கிராமம், ஆண்டியப்புளியங்குளம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில் -**

நானாட்டான் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

### தனியார் கல்வி நிலையங்கள்

# சிவராத்திரியன்று வகுப்பு நடத்துவது சைவசமயத்தை அவமதிக்கும் செயல்

சிவனுக்கு உகந்த விரதம் சிவராத்திரி. சைவமக்கள் அனைவரும் அனுட்டிக்க வேண்டிய விரதம். எல்லா விரதங்களிலும் முதன்மையானதும் பன்மடங்கு சிறந்த பலன் தரும் விரதமாகும். பன்னெடுங் காலாமாக நம் நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற விரதமாகும்.

சிவராத்திரி அன்று இரவு மாத்திரமின்றி பகல் முழுவதும் விரதத்திற்குரிய நாளாகும். விரதநாளின் முதல் நாளே ஒருபொழுது உணவுண்டு விரதத்தன்று அதிகாலையில் நீராடி சிவாலயம் சென்று சிவனை வழிபடுதல் வேண்டும். அன்று பகல், இரவு முழுவதும் சிவ சிந்தனையுடன் செயற்பட வேண்டும். அன்று பகல் முழுவதும் உணவை விடுத்து இரவு நான்கு சாமப்பூஜைகள் ஊடாக சிவனைத் தரிசித்து பயன்பெற வேண்டிய நாளாகும்.

மாணவப் பராயத்தினர் முழுமையாக விரதம் அனுட்டிக்க இயலாதவர்கள் இயன்றளவு உணவைச் சுருக்கியும் இரவு இலிங்கோற்பவ பூஜை வரை கண் விழித்தும் விரதத்தை மேற்கொள்ளலாம்.

இத்தகைய சிவராத்திரி தினத்தை இறை வழிபாடு செய்ய அரசாங்கம் விடுமுறை நாளாக்கியுள்ளது. இந்நாளில் தனியார் கல்வி நிலையங்கள் கல்வி போதிக்க ஏற்ற நாளாகக் கருதிக் கற்பித்து வருகின்றார்கள். இது தவறான செயலாகும்.

மேன்மைகொள் சைவநீதியை உடைய சைவ சமயத்தை அவமதிக்கும் செயலாகவே கருதவேண்டியுள்ளது. மாணவர்களும் பெற்றோர்களும் இப்புண்ணிய நாள் பற்றி சிந்திக்க, செயற்பட தடுக்கும் செயலாகவே கருத வேண்டியுள்ளது. புண்ணிய விரத நாளில் இறைவனது பாதங்களைத் தொழாது கற்பதனால் யாது பயன்பெறப் போகின்றார்கள். இதனை

> **"கற்றதனால் ஆய பயன் என்கொல்**
> **வாலறிவன்**
> **நற்றாள் தொழாஅர் எனின்"**

என்பது வள்ளுவர் கூற்றாகும். வழிகாட்டிகளாக விளங்கும் ஆசிரியர்கள் மாணவர்களை திசை திருப்பக்கூடாது. கற்பிப்பதோடு மாத்திரம் நில்லாது ஆன்மீக வழியில் செல்லவும் வழிகாட்ட வேண்டும். ஆன்மீக வழியூடாக அகத்தூய்மை, புறத்தூய்மை பெறவும். இதனூடாக மன ஒடுக்கம் பெறவும் வழிவகுக்கும். மன ஒடுக்கம் கல்வியில் உயர வழிவகுக்கும்.

எனவே சிவராத்திரி தினத்தில் கல்வி நிலையங்களில் வகுப்பு நடத்தாது சமயம் வளர ஒத்துழைக்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றனர் காரைநகர் மாணிக்கவாசகர் சபையினர்.

(இ)

# அபிநந்தனுடன் வந்த அந்தப் பெண் யார்?

வாகா,மார்ச்04

பாகிஸ்தானில் சிறைபிடிக்கப்பட்ட சென்னையை சேர்ந்த விமானி அபிநந்தனை வாகாவில் வைத்து இந்தியாவிடம் ஒப்படைக்கும்போது அவருடன் வந்த பெண் மணி பற்றிய விவரம் தெரியவந்து இருக்கிறது.

விடுதலையான அன்றிரவு 9.15 மணிக்கு அபிநந்தனை அழைத்துக்கொண்டு வந்த பாகிஸ்தான் அதிகாரிகள், இந்திய அதிகாரிகளிடம் அவரை ஒப்படைத்தனர்.

அப்போது அபிநந்தனோடு ஒரு பெண்மணி உடன் வந்தார். நடுத்தர வயது கொண்ட அவர், சிவப்பு நிற சுடிதார் அணிந்து இருந்தார். சிரித்த முகத்துடன் பார்ப்பதற்கு இந்திய பெண்மணி போல் காட்சி அளித்தார்.


அபிநந்தனை ஆவலோடு நோக்கிய அனைத்து விழிகளும் அந்த பெண்மணி மீதும் மொய்க்கத் தவறவில்லை.

அந்தப் பெண் அபிநந்தனின் உறவுப்பெண்ணா? அல்லது அதிகாரியா? அப்படி என்றால் அவர் இந்திய அதிகாரியா? அல்லது பாகிஸ்தான் அதிகாரியா? – என்று பார்ப்பவர்கள் மனதில் பல்வேறு சந்தேகங்கள் தோன்றின.

தற்போது அந்த பெண் யார் என்பதற்கு விடை கிடைத்து விட்டது. அவரது பெயர் டாக்டர் பரிகா புக்தி, பாகிஸ்தான் நாட்டின் வெளியுறவுத் துறையில் இந்திய விவகாரங்களைக் கவனித்து வரும் இயக்குநராக இருக்கிறார்.

பாகிஸ்தான் நாட்டில் உள்ள பலுசிஸ்தான் என்ற பகுதியைச் சேர்ந்தவர். டாக்டருக்கு (எம்.பி.பி.எஸ்.) படித்து இருக்கின்றமையுடன் பாகிஸ்தான் வெளியுறவுத் துறையில் எவ்.எஸ்.பி. என்ற பட்டமும் பெற்றவர்.

திறமையானவர் பரிகா புக்தி, மிகவும் புத்திசாலி. சிறந்த பேச்சாற்றலும், ராஜதந்திரமும் மிக்கவர். சிக்கலான இந்திய – பாகிஸ்தான் விவகாரங்களை, சாதுரியமாகக் கையாண்டு வருகின்றவர் என அவரை பாகிஸ்தான் அதிகாரிகள் புகழ்கிறார்கள்.



இந்திய உளவாளியாகக் குற்றம் சாட்டப்பட்டு பாகிஸ்தான் பிடியில் இருந்து வரும், குல்பூன் ஜாதவ் விவகாரத்தையும் பரிகா புக்திதான் கவனித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானில் அபிநந்தனுக்கு மனரீதியான துன்புறுத்தலாம்!



பாகிஸ்தானில் இருந்தபோது மனரீதியாகத் தாம் துன்புறுத்தப்பட்டார் என்று அபிநந்தன் வாக்குமூலம் அளித்திருக்கிறார் என ஏ.என்.ஐ. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

காஷ்மீரில் தாக்குதல் நடத்த வந்த பாகிஸ்தான் போர் விமானங்களுக்கு எதிரான பதிலடி நடவடிக்கையின் போது, பாகிஸ்தானில் தரை இறங்கிய இந்திய விமானப்படை விமானி அபிநந்தன், அந்த நாட்டு இராணுவத்திடம் பிடிபட்டார்.

மூன்று தினங்கள் கழித்து அவரை வாகா எல்லையில் இந்திய அதிகாரிகளிடம் பாகிஸ்தான் ஒப்படைத்தது. இரவோடு இரவாக, விமானப்படை விமானம் மூலம் அபிநந்தன் டெல்லிக்கு கொண்டுவரப்பட்டார். உடனடியாக, டெல்லியில் உள்ள விமானப்படை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அபிநந்தனுக்கு வழக்கமான மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டது. அவரது வலது கண் வீங்கி இருந்தது. அதற்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. மனஅழுத்தத்துக்கு உள்ளாக்கப்பட்டு இருந்ததால், அவரை சகஜநிலைக்கு கொண்டுவரும் பணியும் நடந்தது.

பாகிஸ்தானில் இருந்தபோது அபிநந்தன் உடலில் ஏதேனும் ஊசி மருந்து செலுத்தப்பட்டதா என்பதை கண்டறிய பரிசோதனை நடத்தப்பட்டது. அவரது நடமாட்டத்தை வைத்து இந்தியாவை உளவு பார்க்கும் நோக்கத்தில், அவரது உடலில் உளவுக் கருவிகள் ஏதேனும் பொருத்தப்பட்டு இருக்கின்றனவா என்றும் முழுமையாக ஆய்வு செய்யப்பட்டது.

நேற்று முன்தினம் காலை அபிநந்தனை அவருடைய குடும்பத்தினர் சந்தித்தனர். விமானப்படை தளபதி பிரேந்தர் சிங் தனோயா உள்ளிட்ட உயர் அதிகாரிகளும் சந்தித்தனர்.

பின்னர், இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் நிர்மலா சீதாராமன், அபிநந்தனைச் சந்தித்தார். அப்போது, பாகிஸ்தானில், தான் 60 மணி நேரம் இருந்த போது நடந்த சம்பவங்களை நிர்மலா சீதாராமனிடம் அபிநந்தன் விவரித்தார்.

உங்களுடைய துணிச்சல் மற்றும் மனஉறுதியை பார்த்து ஒட்டுமொத்த நாடும் பெருமைப்படுகிறது என்று நிர்மலா சீதாராமன் பாராட்டினார்.

டெல்லியில் உள்ள ராணுவ மருத்துவமனையில் அபிநந்தனுக்கு 'கூலிங் டவுன்' சிகிச்சையை மருத்துவர்கள் தொடங்கி உள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது. தொடர்ந்து 2 நாள்கள் சிகிச்சைக்கு பின்னர், அது தொடர்பான விவரங்கள் இந்திய அரசுக்கு அனுப்பப்படும் என கூறப்படுகிறது.

கூலிங் டவுன் சிகிச்சை என்பது மனதையும், மன நலத்தையும் பேணுவதற்காக அளிக்கப்படும் சிகிச்சையாகும்.வழக்கமானதாக கருதப்படும் இந்த சிகிச்சை விவரங்கள் அறிக்கையாகத் தயாரிக்கப்படும்.

பாகிஸ்தான் வசம் இருந்தபோது தாம் மனரீதியாகத் துன்புறுத்தப்பட்டார் என அபிநந்தன் கூறினார் என்று தெரிவிக்கப்படுகிறது. தம்மை உடல்ரீதியாகப் பாகிஸ்தான் துன்புறுத்தவில்லை என்றும் அவர் கூறியுள்ளார். அவருக்கு மனோதத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டபோது இந்தத் தகவல் தெரியவந்துள்ளது.

இதனால், தொடர்ச்சியாக அபிநந்தனுக்கு சிகிச்சை அளிக்கப்படவிருக்கிறது. இந்தியா தொடர்பான முக்கிய ஆவணங்களை அவர் பாகிஸ்தானுக்கு கொடுக்கவில்லை, இதன் காரணமாகவே மன அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது என அவர் அளித்துள்ள வாக்குமூலத்தில் தெரியவந்துள்ளது என்று ஏ.என்.ஐ.செய்தி வெளியிட்டு உள்ளது.

## ரபேல் போர் விமானங்கள் இருந்திருந்தால் நிறைய சாதித்திருக்கலாம் என்கிறார் மோடி



புதுடில்லி,மார்ச்04

இந்தியாவிடம் ரபேல் போர் விமானங்கள் இருந்திருந்தால் இன்னும் நிறைய சாதித்து இருக்கலாம் என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார்.

டில்லியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தனியார் நிகழ்ச்சி ஒன்றில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொண்டு பேசியபோது இதனை அவர்கூறினார். அங்கு அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு: –

பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத முகாம்கள் மீது இந்தியா வான் தாக்குதல் நடத்திய பிரச்சினையில், இந்தியாவின் பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் உலகமே இந்தியாவுக்கு ஆதரவாக நிற்கும்போது, இங்குள்ள சில கட்சிகள் தாக்குதல் பற்றி கேள்வி எழுப்புகின்றன. எனது எதிர்ப்பாளர்கள் தாராளமாக என்னைப்பற்றி விமர்சனம் செய்யலாம்.

ஆனால் அவர்களது மோடிக்கு எதிரான கிளர்ச்சி மசூத் அஸார், ஹபீஸ் சயீத் போன்ற பயங்கரவாதிகளுக்கு உதவுவதாக ஆகிவிடக் கூடாது. ஒட்டுமொத்த நாடே ரபேல் போர் விமானம் இல்லையே என்ற கவலையில் இருந்தபோது, இந்திய விமானப்படையிடம் அந்த விமானம் இருந்திருந்தால் என்ன ஆகியிருக்கும் என அறிந்துகொள்வதற்கு ஆவலாக இருக்கிறது.

இந்தியாவிடம் ரபேல் போர் விமானங்கள் இருந்திருந்தால் இன்னும் அதிக சாதனைகளைச் செய்திருக்க முடியும். முந்தைய அரசின் சுயநலத்தால் நாடு பலவகையில் பாதிக்கப்பட்டுள்ளது. இப்போது அரசியல் ரபேல் போர் விமானம் பக்கம் திரும்பியிருக்கிறது.

நாட்டின் முன் உள்ள சவால்களில் ஒன்று, சிலர் தங்கள் சொந்த நாட்டையே எதிர்ப்பது தான். தேசம் முழுவதும் ஆயுத படையினருக்கு ஆதரவாக இருந்தபோது, சில கட்சிகள் அவர்கள் மீது சந்தேகம் எழுப்புகின்றன. இதுபோன்ற கட்சிகளின் கருத்துகளையும், அறிக்கைகளையும் பாகிஸ்தான் இந்தியாவுக்கு எதிராகப் பயன்படுத்துகிறது.

மோடிக்கு எதிரான விமர்சனங்கள் மூலம் அவர்கள் நாட்டை எதிர்க்கிறார்கள், நாட்டின் நலன்களையும் சமரசம் செய்துகொள்கிறார்கள். அவர்களுக்கு நமது ஆயுதப்படைகள் மீது நம்பிக்கை இருக்கிறதா? அல்லது சந்தேகப்படுகிறீர்களா? என்று கேட்க விரும்புகிறேன். இது போன்றவர்களுக்கு நான் சொல்லிக்கொள்வது, மோடியை தாராளமாக எதிர்க்கலாம், அரசின் பணிகளில் உள்ள குறைபாடுகளை சொல்லலாம், ஆனால் பயங்கரவாதத்தை வளர்ப்பவர்களுக்கு உதவி செய்யாதீர்கள்.

மோடியை எதிர்க்கிறீர்களா? செய்யுங்கள், ஆனால் தேசநலன்களை எதிர்க்காதீர்கள். மோடிக்கு எதிரான தொல்லைகள் மசூத் அஸார், ஹபீஸ் சயீத் போன்ற பயங்கரவாதிகளுக்கு உதவாத வகையில் கவனமாக நடந்துகொள்ளுங்கள். இந்தியாவின் ஒற்றுமை நாட்டுக்கு உள்ளேயும், வெளியேயும் இருக்கும் பலரையும் பயமுறுத்தி உள்ளது என்பதை மறந்து விடாதீர்கள்

21 ஆம் நூற்றாண்டு இந்தியாவுக்கு சொந்தமானதாக இருக்கும் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது.

– இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி கூறினார்.

(உ)

## ஜம்மு – காஷ்மீரில் துப்பாக்கிச் சமர் 60 மணி நேரத்தில் ஐந்து பேர் சாவு



ஜம்மு – காஷ்மீரில் கடந்த 60 மணிநேரமாக தீவிரவாதிகளுடன் நடந்த துப்பாக்கிச் சண்டையில் இதுவரை 2 துணை இராணுவப் படை வீரர்கள், 2 பொலிஸார், ஒரு சிவிலியன் என 5 பேர் பலியாகியுள்ளனர்.

அதேசமயம், தீவிரவாதிகள் எத்தனை பேர் பலியாகியுள்ளனர் என்கிற விவரம் தெரியவரவில்லை என்று பாதுகாப்புப் படை வட்டாரங்கள் கூறியுள்ளன.

ஜம்மு காஷ்மீரின் குப்வாரா மாவட்டத்தில் உள்ள பாபாகுண்ட் கிராமத்தில் தீவிரவாதிகள் பலர் பதுங்கியிருக்கின்றனர் என்று பாதுகாப்புப் படையினருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து, நேற்று முன்தினம் முதல் அந்த கிராமப் பகுதியைப் பாதுகாப்புப் படையினர், காஷ்மீர் பொலிஸார் கட்டுப்பாட்டுக்குள் எடுத்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். இதில் பல்வேறு வீடுகளில் பதுங்கியிருக்கும் தீவிரவாதிகள் பாதுகாப்புப் படையினரை நோக்கி துப்பாக்கியால் சுட்டுத் தாக்குதல் நடத்தினர். இதற்கு பாதுகாப்புப் படையினர் பதிலடி கொடுத்தனர்.

கடந்த 60 மணிநேரம் நடந்த துப்பாக்கிச் சண்டையில் துணை இராணுவப் படை வீரர்கள் 2 பேர், காஷ்மீர் பொலிஸார் இருவர், பொதுமக்கள் ஒருவர் என மொத்தம் 5 பேர் கொல்லப்பட்டனர் எனப் பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

(உ)

# கனடாவில் உள்ள சீன நிறுவன அதிகாரியை அமெரிக்காவுக்கு நாடு கடத்த முடிவு?

## கொதிக்கிறது பீஜிங்

சீனாவின் ஹுவாய் நிறுவன அதிபரின் மகளும் அந்த நிறுவனத்தின் முக்கிய அதிகாரியுமான மெங் வான்ஜவ்வை கனடாவில் இருந்து அமெரிக்காவுக்கு நாடு கடத்தும் நடவடிக்கைக்கு சீனத் தூதரகம் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

ஈரான் நாட்டின் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்தது. இதை சீனாவின் பன்னாட்டு தொலை தொடர்பு நிறுவனம் ஹுவாய் மீறியது என முறைப்பாடு எழுந்தது. மேலும், அந்த நிறுவனத்தின் மீது 23 குற்றச்சாட்டுகளை அமெரிக்கா சுமத்தி உள்ளது.

இந்த நிலையில், கனடாவின் வான்கூவர் நகர விமான நிலையத்தில் ஹுவாய் நிறுவன அதிபர் ரென் ஜெங்பெய்யின் மகள் மெங்வான்ஜவ் கடந்த டிசம்பர் மாதம் முதலாம் திகதி கைது செய்யப்பட்டார்.

அவர் கனடாவின் வான்கூவர் நகரில் உள்ள தனது இல்லத்தில்தான் தங்கி இருக்க வேண்டும், பாஸ் போர்ட்டை ஒப்படைத்து விட வேண்டும் என்பன உட்பட பல நிபந்தனைகளின் பேரில் பிணையில் விடுவிக்கப் பட்டார்.

அவரை அமெரிக்காவுக்கு நாடு கடத்துவது தொடர்பான விசாரணை பிரிட்டிஷ் கொலம்பியா உயர்நீதி மன்றில் நடக்கிறது.

இதற்கிடையே அவரை நாடு கடத்துவதற்கு அனுமதி அளிப்போம் என்று கனடா அரசு இப்போது அறிவித்து, அதற்கான நடைமுறைகளைத் தொடங்கி உள்ளது. இருப்பினும் இறுதி முடிவை நீதிமன்றுதான் எடுக்கும் என்றும் கூறி இருக்கிறது.

கனடா அரசின் முடிவுக்கு, ஒட்டாவா நகரில் உள்ள சீனத் தூதரகம் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இது அரசியல் துன்புறுத்தல் என அது சாடி உள்ளது.

இருந்தபோதும் இந்த விடயம் தொடர்பில் பிரிட்டிஷ் கொலம்பியா உயர்நீதிமன்றம் நாளை மறுதினம் முடிவு எடுத்து அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பின்லேடனின் சகா மசூத் அஸார் பாக். இராணுவ ஆஸ்பத்திரியில்!

## மோசமான சிறுநீரகக் கோளாறாம்



இஸ்லாமாபாத்,மார்ச்04

ஜெய்ஷ் இ முகமது தீவிரவாத அமைப்பின் தலைவர் மசூத் அஸார் (வயது 50) பாகிஸ்தானில் இருக்கிறார் எனவும், வீட்டை விட்டு வெளியே வர முடியாத அளவுக்கு அவர் நோயால் பாதிக்கப்பட்டு உள்ளார் எனவும் பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் குரேஷி தெரிவித்து இருந்தார்.

மசூத் அஸார் சிறுநீரகக் கோளாறால் பாதிக்கப் பட்டு இருக்கிறார் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

இது குறித்து பாகிஸ்தான் அதிகாரிகள் நேற்று கூறுகையில், சிறுநீரகக் கோளாறால் பாதிக்கப்பட்டு உள்ள மசூத் அஸாருக்கு ராவல்பிண்டியில் உள்ள இராணுவ ஆஸ்பத்திரியில் தொடர் 'டயாலிசிஸ்' சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது எனத் தெரிவித் தனர்.

ஒஸாமா பின்லேடனின் நெருங்கிய நண்பராக மசூத் அஸார் இருந்தார். 1999 ஆம் ஆண்டு காந்தகாரில் இந்திய விமானத்தை தீவிரவாதிகள் கடத்திப் பயணிகளை பிணைக் கைதிகளாக வைத்து மிரட்டியதால் இந்தியச் சிறையில் இருந்து மசூத் அஸார் விடுவிக்கப்பட்டார்.

பின்னர் ஜெய்ஷ் - இ - முகமது பயங்கரவாத அமைப்பை அவர் உருவாக்கினார். இந்தியாவில் நாடாளுமன்றத்தின் மீது தாக்குதல், உரி மற்றும் பதான்கோட் இராணுவ முகாம்கள் மீது தாக்குதல் உட்பட தற்போது நடந்த புல்வாமா தாக்குதல் வரை இந்த பயங்கரவாத அமைப்புக்கு தொடர்பு உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# தீவிரவாதிகளுக்கு எதிராக மட்டும் பயன்படுத்த அமெ. வழங்கிய எவ் - 16 விமானம் மூலமே இந்தியாவைத் தாக்கியது பாகிஸ்தான்?

## விவரங்கள் திரட்டப்படுகின்றன என்கிறார் அமெ. செய்தித் தொடர்பாளர்



தீவிரவாதிகளுக்கு எதிராகப் பயன்படுத்துவதற்காக அமெரிக்கா வழங்கிய எவ் - 16 ரக விமானங் களை இந்தியாவுக்கு எதிராகப் பாகிஸ் தான் பயன்படுத்தியதாக முறைப்பாடு எழுந்துள்ள நிலையில் இதுபற்றி விசாரணை நடைபெறவுள்ளது.

காஷ்மீர் புல்வாமாவில் ஜெய்ஷ் - இ - முகமது தீவிரவாதி நடத்திய தற்கொலைப்படை தாக்குதலில் 40 இந்திய வீரர்கள் உயிரிழந்தனர். இதற்குப் பதிலடியாக கடந்த 26ஆம் திகதி பாகிஸ்தான் எல்லைக்குள் 50 கி.மீ. ஊடுருவிய இந்திய போர் விமா னங்கள் பாலகோட், முஷாபராபாத், சாகோட்டி ஆகிய 3 இடங்களில் செயற்பட்ட ஜெய்ஷ் - இ - முகமது தீவிரவாத முகாம்களை குண்டு களை வீசி அழித்தன.

அதைத் தொடர்ந்து இரு நாடுக ளுக்கும் இடையே போர்ப் பதற்றம் ஏற்பட்டது. கடந்த 27 ஆம் திகதி பாகிஸ்தான் விமானப்படையின் போர் விமானங்கள் காஷ்மீரின் ரஜவுரி பகுதியில் இந்திய ராணுவ நிலைகளைத் தாக்க முயன்றன. அந்த விமானங்களை இந்திய விமா னப் படையின் போர் விமானங்கள் விரட்டியடித்தன. அப்போது பாகிஸ் தானின் எவ் 16 ரக போர் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது.

இந்த வான்வெளிச் சண்டையின் போது பாகிஸ்தான் போர் விமானங் களை அவர்களின் எல்லைக்கே சென்று இந்திய போர் விமானங்கள் விரட்டின. இந்திய விமானி அபிநந் தன் மிக் 21ரக விமானத்தில் பாகிஸ் தானின் எவ்16 ரக விமானத்தை விரட்டிச் சென்றார்.

அப்போது எதிர்பாராதவிதமாக மற்றொரு பாகிஸ்தான் போர் விமா னத்தின் ஏவுகணை, அபிநந்தனின் விமானத்தைத் தாக்கியது. பாரசூட் உதவியுடன் அவர் உயிர் தப்பினார். ஆனால் அவர் பாகிஸ்தானில் தரை யிறங்கியதால், பாகிஸ்தான் இராணு வம் சிறைபிடித்தது. சர்வதேச நாடுக ளின் நெருக்கடி மற்றும் இந்திய அரசின் நடவடிக்கைகளால் அபிநந் தனை பாகிஸ்தான் இந்தியாவிடம் மீண்டும் ஒப்படைத்தது.

இந்திய எல்லைப்பகுதியில் அத்து மீறி தாக்குதல் நடத்தியவை பாகிஸ் தானுக்கு அமெரிக்கா வழங்கிய எவ் - 16 ரக விமானங்கள். இந்த விமா னங்களை தீவிரவாதிகளுக்கு எதிராக மட்டுமே பயன்படுத்த வேண்டும் எனப் பாகிஸ்தானிடம் அமெரிக்கா தெரிவித்து இருந்தது. இதற்கான ஒப்பந்தத்திலும் பாகிஸ்தான் கையெ முத்திட்டுள்ளது.

ஆனால் தற்போது அந்த விமா னங்களை இந்தியாவுக்கு எதிராகப் பாகிஸ்தான் பயன்படுத்தியுள்ளது. இதற்கான ஆதாரங்களை இந்திய விமானப்படை திரட்டியுள்ளது. இது தொடர்பாக முப்படை தளபதிகளும் ஏற்கெனவே பத்திரிகையாளர் சந் திப்பின்போது விரிவாக விளக்கி யுள்ளனர்.

ஆனால், இந்த தாக்குதல் நடவ டிக்கைக்கு தாங்கள் எவ் -16 விமா னம் எதையும் பயன்படுத்தவில்லை என்று பாகிஸ்தான் மறுப்பு தெரிவித்து வருகிறது. இந்த புகாரையடுத்து பாகிஸ்தானின் விதிமீறல் குறித்து விசாரணை நடத்த அமெரிக்கா முடிவு செய்துள்ளது. இதுதொடர்பான தகவல்களை திரட்டி வருவதாக அமெ ரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் கோன் பாக்னர் தெரி வித்துள்ளார். மேலும் இது உண்மை என்றால் விசாரணை செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ் - 16 ரக விமானங்களின் எலெக்ட்ரானிக் சிக்னல்கள் இந்திய விமானப் படை ரேடாரில் பதிவாகி யுள்ளன. இந்த விவரங்கள் விரை வில் அமெரிக்கா வசம் ஒப்படைக் கப்படும் எனத் தெரிகிறது.

(உ)

# இந்தியா மீது பயங்கரவாதத் தாக்குதல் நடத்துவதற்கு பாகிஸ்தான் மண்ணைப் பயன்படுத்த அனுமதியோம்!

## இஸ்லாமாபாத் திட்டவட்டம்

இஸ்லாமாபாத்,மார்ச்04

இந்தியா உள்ளிட்ட எந்தவொரு நாட் டின் மீதும் பயங்கரவாதத் தாக்குதலை நடத்துவதற்குத் தனது மண்ணை பயன் படுத்த பாகிஸ்தான் அனுமதிக்காது என பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் மெக் மூத் குரேஷி தெரிவித்தார்.

பாகிஸ்தானில் பிடிபட்ட இந்திய விமா னப் படை அதிகாரி விங் கொமாண்டர் அபிநந்தனை விடுதலை செய்தமைக்கு நிர்ப்பந்தம் ஏதும் காரணம் அல்ல என் றும் அவர் விளக்கம் அளித்தார்.

இந்திய விமானப்படை விமானி அபி நந்தனை பாகிஸ்தான் படை கடந்த 27 ஆம் திகதி சிறைப் பிடித்தது. 3 நாட்க ளுக்கு பின்னர் அவரை விடுதலை செய் தது. அவரை, இந்தியாவிடம் வாகா எல் லையில் ஒப்படைத்தது.

நல்லெண்ண நடவடிக்கையின் அடிப் படையில் அவரை விடுதலை செய்வதாக அந்த நாட்டின் பிரதமர் இம்ரான்கான் அறிவித்தார். ஆனாலும் அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் நிர்ப்பந் தம் காரணமாகவே அவரை பாகிஸ்தான் விடுதலை செய்ய முன்வந்தது எனத் தகவல்கள் வெளிவந்தன. குறிப்பாக புல் வாமா தாக்குதலை தொடர்ந்து எழுந் துள்ள பதற்றமான சூழலை தணிக்கிற விதத்தில் அபிநந்தனை பாகிஸ்தான் விடுதலை செய்ய வேண்டும் என அமெ ரிக்கா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சவுதி அரேபியா ஆகிய நாடுகள் கடுமையாக நிர்ப்பந்தம் செய்தன எனக் கூறப்பட்டது.

ஆனால் ஜெனிவா உடன்படிக்கை யின் அடிப்படையில் அபிநந்தன் விடுவிக் கப்பட்டார் என்று இந்தியா கருதுகிறது.

இந்த நிலையில் பி.பி.ஸி. (உருது) நிறுவனத்துக்கு பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் மெக்மூத் குரேஷி பேட்டி அளித்தார். அப்போது அவர், "நாங்கள் உங்கள் (இந்தியர்) துயரத்தை அதிகரிக்க விரும்பவில்லை உங்கள் குடிமக்கள் கஷ்டப்பட விரும்பவில்லை. நாங்கள் சமா தானத்தைத் தான் நாடுகிறோம் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்" என்று குறிப்பிட்டார்.



நிர்ப்பந்தம் காரணமாகவோ, கட்டாயத் தின் பேரிலோதான் அபிநந்தன் விடு தலை செய்யப்பட்டார் என்பதை அவர் நிராகரித்தார்.

இது பற்றி அவர் குறிப்பிடுகையில், "அபிநந்தனை விடுதலை செய்ய நிர்ப் பந்தம் வரவில்லை. கட்டாயப்படுத்தப் படவும் இல்லை" என்றார்.

மேலும், இந்தியா உள்ளிட்ட எந்தவொரு நாட்டின் மீது பயங்கரவாத தாக்குதல் நடத்தவும் தனது மண்ணை பயன்படுத் துவதை பாகிஸ்தான் அனுமதிக்காது என் றும் அவர் திட்டவட்டமாக தெரிவித்தார்.

"புல்வாமா தாக்குதலை பொறுத்த வரையில், ஜெய்ஷ் - இ - முகமது அமைப்பு பொறுப்பேற்றதாகக் கூறப்படுவதில் இன் னும் குழப்பம் உள்ளது. இது தொடர்பாக அந்த அமைப்பின் தலைமையை விசா ரித்தபோது, இல்லை என்று பதில் வந்தது" என்றும் கூறினார்.

"நாடு அல்லது பிராந்தியத்தின் அமைதி யைக் குலைக்க தேச விரோத சக்திகளை பாகிஸ்தான் அனுமதிக்காது. பயங்கரவாத குழுக்கள் மீது நடவடிக்கை எடுக்க திட்ட மிட்டு வருகிறோம்" என மெக்மூத் குரேஷி கூறினார் என ஜியோ நியூஸ் கூறியது.

# ஈழத்துச் சிதம்பரத்தில் அகண்ட நாம பஜனை



இன்று திங்கட்கிழமை சிவராத்திரி தினமாகும். சிவராத்திரி சிவனுக்கு உகந்த விரதமாகும். எல்லா விரதங்களிலும் முதன்மையானதும் பன்மடங்கு சிறந்த பலனைத் தரும் விரதமாகும். சைவமக்கள் அனைவரும் அனுட்டிக்க வேண்டிய விரதமாகும்.

அன்று இரவு மாத்திரமன்றி பகல் முழுவதும் விரதத்திற்குரிய நாளாகும். விரத நாளின் முதல் நாளே ஒருபொழுது உண்டு. விரதத்தன்று அதிகாலையில் நீராடி சிவாலயம் சென்று சிவனை வழிபடுதல் வேண்டும். இன்று பகல், இரவு முழுவதும் சிவசிந்தனையுடன் செயற்பட வேண்டும். அன்று உணவை சுருக்கியேனும் விடுத்தேனும் மனம், வாக்கு, காயத்தினால் இறைவனை மெய்யன்போடு வழிபடுதல் வேண்டும்.

அன்று இரவு முழுவதும் நித்திரை விழிக்க இயலாதவர்கள் லிங்கோற்பவ காலப்பூஜை வரையும் கண்விழித்து வழிபட வேண்டும். மந்திரங்கள் எல்லாவற்றிலும் தலையாய மந்திரமாகிய ஓம் நமசிவாய சிவாயநம ஓம் என்னும் திருவைந்தெழுத்தை இருபத்துநான்கு மணித்தியாலமும் அடியார்கள் ஒன்று சேர்ந்து ஒலிக்க திருவருள்பாலித்துள்ளது.

சிவராத்திரி தினமாகிய இன்று திங்கட்கிழமை அதிகாலைப் பூஜையுடன் (உஷாக்காலம்) தொடங்கி அடுத்த நாள் உஷாக்காலப் பூஜை வரையும் பஜனை நடைபெறவுள்ளது.

நாதன் நாமம் நமச்சிவாயவே என்றும் நற்றுணையாவது நமச்சிவாயவே என்றும் வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே என்றும் தேவாரங்கள் போற்றுகின்ற மந்திரத்தை ஒன்றுகூடி ஒலிக்க சமய நிறுவனங்கள், அடியார்கள், பாடசாலை மாணவர்கள், கல்லூரி மாணவர்கள் கலந்து (குறைந்தது ஒரு மணித்தியாலம்) சிறப்பிக்குமாறு மாணிக்கவாசகர் சபையினர் வேண்டுகின்றனர்.

அன்று பகல் வேளையில் குருக்கள் மூலம் நீரினால் அபிஷேகம் செய்யவும் அஷ்டோத்திர நாம அர்ச்சனை (108 நாமங்கள்) செய்யவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. சிவலிங்கப் பெருமானுக்கு நான்கு சாமமும் லிங்கோற்பவருக்கு மூன்றாம் சாமமும் விடே அபிஷேக ஆராதனையும் நடைபெறவுள்ளது. மறுநாள் அதிகாலை எம்பெருமான் 'துர்வாக சாகரம்' எனப்படும் புண்ணிய சமுத்திரத்தில் தீர்த்தமாடிக் கொள்வர். அடியார்களும் சமுத்திர தீர்த்தமாடிக் கொள்ளலாம். மாணிக்கவாசக அன்னதான சபையில் அடியார்கள் தமது பாறணையை முடிப்பதற்கு திருவமுது வழங்கப்படும்.

அடியார்கள் வருகை தந்து இறையருள் பெற்று இஷ்ட சித்திகளைப் பெற் றுய்யுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

பண்டிதர், எம்.எஸ்.வேலாயுதபிள்ளை,
தலைவர்,
காரைநகர் மணிவாசகர் சபை,
காரைநகர்.

---

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் :

# மக்கள் கண்ணீர் சிந்தி கதறியழ இடமளியுங்கள்!

– சண்முகம் தவசீலன்



இலங்கை இராணுவத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையில் கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக இடம்பெற்ற யுத்தத்தின் இறுதிக் கட்ட யுத்தம் உக்கிரமடைந்து 2009 மே 18 ஆம் திகதி இந்த யுத்தமானது நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டது.

இந்தநிலையில் 2019 மற்றும் அதற்கு முற்பட்ட காலப்பகுதியில் அநியாயமாகக் கொல்லப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்களை நினைவு கூர்ந்து மே பதினெட்டில் உணர்வு பூர்வமாக நினைவு நிகழ்வை கொண்டாடுகின்ற மக்களுக்கு பல்வேறு தரப்புக்களாலும் வழங்கப்படுகின்ற துன்பங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. 2019 மே 18 முதல் வருடா வருடம் மே 18 இலங்கை அரசாங்கம் யுத்த வெற்றி நாளாக கொண்டாடுகின்றன அதேவேளையில் தமிழர் தாயகப் பகுதிகள் மற்றும் புலம்பெயர் தேசமெங்கும் அந்த நாளை துக்க நாளாக ஓர் இனப் படுகொலை நாளாக அனுஷ்டித்து வருகின்றார்கள்

அந்தவகையிலேயே இறுதி யுத்தம் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் கிழக்கிலே இருக்கின்ற முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியில் கடந்த சில ஆண்டுகளாக நினைவேந்தல் நிகழ்வு சிறப்பாக இடம்பெற்று வருகின்றது அந்த நிகழ்வை யார் செய்வது என்ற போட்டியில் அரசியல் தரப்புக்கள் மற்றும் அரசியல் நோக்கம் கொண்டவர்களால் மக்களுக்கு இழைக்கப்படும் துன்பங்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

கடந்த ஆண்டு யாழ் பல்கலைக்கழக மாணவர்களது முயற்சியின் பலனாக பல்வேறு சர்ச்சைகளுக்கு மத்தியில் அவர்களது அயராத உழைப்பின் பயனாக அரசியல் கட்சிகள் அனைத்தையும் ஒன்றிணைத்து ஓர் இடத்திலே அமைதியான முறையில் அந்த நிகழ்வை நடத்த வேண்டும் என தெரிவித்து அனைத்து தரப்புக்களையும் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் முகம் கொடுத்து அந்த தரப்புக்களை ஒன்றிணைத்து ஒரு நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தார்கள்.



அந்த நினைவேந்தல் நிகழ்வை செய்வதற்கும் சர்வதேச ரீதியிலே ஒரு ஆழமான கருத்துக்களை சொல்வதற்கும் குறிப்பாக இலங்கையில் இடம்பெற்றது இன அழிப்பு என்ற பிரேரணையை கொண்டு வந்த வடக்கு மாகாணத்தின் அன்றைய முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனின் சிறப்பு உரையும் நினைவு கூறத்தக்கவை.

ஆனால் அந்த நிகழ்வுகள் சிறிய குழப்பங்கள் நடைபெற்றாலும் அனைவருடைய கவனத்தையும் ஈர்க்கும் வகையில் அமைந்திருந்தது. இவ்வாறு தொடர்ச்சியாக இந்த நிகழ்வை யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்துவார்கள் எனவும் அங்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் தற்போதைய சூழலில் மே 18 நிகழ்வுகள் இவ்வருடமும் நடைபெற இருக்கின்ற காலத்திலே பல்வேறு தரப்பினரும் பல்வேறு குழுக்களை அமைத்து இம்முறையும் குழப்பங்களை உருவாக்குவதற்காக முயன்று வருவதை காணக்கூடியதாக இருக்கின்றது

உண்மையிலேயே இந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு என்பது மக்கள் தங்கள் உயிரிழந்த உறவுகளை நினைத்து கண்ணீர் சிந்தி அழுவதற்கும் அந்த மக்களுடைய செய்தி சர்வதேச மட்டத்திற்கு எடுத்துச் செல்லப்படுவதற்கு ஒரு காரணமாக அமைய வேண்டுமே தவிர அரசியல் நோக்கங்களுக்காக அரசியல் கட்சிகளினால் குழப்பப்படுகின்றமையை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

ஆகவே இந்த நினைவேந்தல் நிகழ்வை பொதுமக்கள் சார்பாக சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளால் ஒரு குழு அமைக்கப்பட்டு அந்த நினைவேந்தல் நிகழ்வு யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் கூறியவை போன்று அனைத்து சிவில் சமூக அமைப்புகளை மாத்திரம் உள்ளடக்கி அரசியல் கட்சிகள் அதிலே தலைமை வகிக்காது அவற்றின் ஆதரவோடு எந்தவித குழப்பங்களும் அல்லாது நடைபெற வேண்டும் என்பதே இந்த மக்களுடைய எதிர்பார்ப்பாக இருக்கின்றது

ஆகவே ஆங்காங்கே தனித்தனியே குழுக்களை அமைத்து அந்த நிகழ்வை செய்வதற்கு தயாராகி வருபவர்கள் ஒரே அணியாக இணைந்து பல ஆயிரக்கணக்கான மக்கள் கொன்றொழிக்கப்பட்ட அந்த இடத்திலே –முள்ளிவாய்க்காலில் – இவ்வருடம் ஒரு நல்ல செய்தியை சொல்வதற்கு முன்வரவேண்டும் என்பதே இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது.

> " உண்மையிலேயே இந்த முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு என்பது மக்கள் தங்கள் உயிரிழந்த உறவுகளை நினைத்து கண்ணீர் சிந்தி அழு வதற்கும் அந்த மக்களுடைய செய்தி சர்வதேச மட்டத்திற்கு எடுத்துச் செல்லப்படுவதற்கு ஒரு காரணமாக அமைய வேண்டுமே தவிர அரசியல் நோக்கங்களுக்காக அரசியல் கட்சிகளினால் குழப்பப்படு கின்றமையை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

# சம்பள உயர்வை வலிறுத்தி நேற்று பொகவந்தலாவையில் போராட்டம்

கொழும்பு, மார்ச் 04

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபாவை வழங்குமாறு வலியுறுத்தி பொகவந்தலாவை நகரில் நேற்று கறுப்புக் கொடிப் போராட்டம் நடத்தப்பட்டது.

1000 ரூபாவுக்கான இயக்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்துக்கு, மலையக இளைஞர்களும் பேராதரவை வழங்கியிருந்தனர்.

பொகவந்தலாவைப் பகுதியிலுள்ள தோட்டத்தொழிலாளர்களும் அணி திரண்டு வந்து பங்கேற்றிருந்தனர்.

நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும் பாகத் திகழும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா வழங்க மறுப்பது ஏன்?, அரசே தோட்டத் தொழிலாளர்களுக்கு பராமுகம் காட்டாதே! ஆயிரம் ரூபாவை வழங்க நடவடிக்கை எடு! என்றெல்லாம் போராட்டக்காரர்களால் கோஷங்கள் எழுப் பப்பட்டன.

(ஐ)



# திருப்பதியில் ரணில்!



புதுடில்லி, மார்ச் 04

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திருப்பதி ஏழு மலையான் ஆலயத்தில் வழிபாடு செய்வதற்காக நேற்றுமுன்தினம் திருமலையை சென்றடைந்தார்.

கொழும்பில் இருந்து சென்னை விமான நிலையத்தை சென்றடைந்த பிரதமர் ரணில் விக்கிரம சிங்க, அவரது மனைவி மைத்ரி விக்கிரமசிங்க மற்றும் அதிகாரிகள் அங்கிருந்து சிறப்பு உலங்கு வானூர்தி மூலம் நேற்று முன் தினம் மாலை 4.35 மணியளவில் திருப்பதி விமான நிலையத்தைச் சென்றடைந்தனர்.

அங்கு பிரதமரை ஆந்திர மாநில அமைச்சர் அமர் நாத் ரெட்டி, மற்றும் மாவட்ட அதிகாரிகள் வரவேற்ற னர்.

பின்னர், அங்கிருந்து ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் மாலை திருமலைக்குப் புறப்பட்டுச் சென்றார். திருமலையில் திருப்பதி தேவஸ்தானம் சார்பில் ஸ்ரீ கிருஷ்ணா விருந்தினர் விடுதியில் அதி காரிகள் வரவேற்றனர்.

நேற்று முன்தினம் இரவு விடுதியில் தங்கியிருந்த ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை திருமலை ஏழுமலையானைத் தரிசித்துவிட்டு, நேற்றுப் பிற்பகல் 1.15 மணியளவில் திருப்பதி விமான நிலையம் வழியாக கொழும்பு திரும்பினார்.

ரணில் விக்கிரமசிங்கவின் பயணத்தை முன் னிட்டு திருப்பதியில் பலத்த பாதுகாப்பு ஏற்படுத்தப் பட்டது.

(ஐ)

# அரச ஊழியருக்கு சம்பள அதிகரிப்பு

## புதிய பட்ஜெட்டில் முன்மொழிவு

கொழும்பு, மார்ச் 04

*2019ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் அரசதுறை ஊழியர்களுக் கான சம்பளத்துடன் சிறப்புக் கொடுப்பனவு ஒன்று இணைக்கப்படும் என்று நிதி அமைச்சுத் தெரிவித்துள்ளது.*

அரசதுறைப்பணியாளர்களின் சம்பள முரண்பாடுகளைச் சீர் செய் வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் கடந்த ஆண்டு நிய மிக்கப்பட்ட சம்பள ஆணைக்குழு வின் பரிந்துரைக்கு அமைய அரச ஊழியர்களுக்கான மேலதிக கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் எரான் விக்ரமரட்ண தெரிவித் துள்ளார். 2019ஆம் ஆண்டுக் கான வரவு–செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் மங்கள சமரவீர நாளை செவ்வாய்க்கிழமை நாடாளுமன் றில் முன்வைக்கிறார்.

இதன்போதே அரச துறை ஊழி யர்களுக்கான சம்பளக் கொடுப்ப னவு அதிகரிப்புத் தொடர்பான முன்மொழிவை நிதி அமைச்சர் முன்வைப்பார் என்று எரான் விக்ரமரட்ண கூறினார்.

மேலும் அரச துறை அலுவலர்க ளுக்கு வழங்கப்பட்டு இடைநிறுத் தப்பட்ட வாகன இறக்குமதித் தீர்வை விலக்கு அனுமதிப்பத்திரம் இரண்டு மாதங்களுக்குள் விடுவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# ஜனாதிபதிக்கான ஒத்துக்கீட்டை நாங்கள் எதிர்க்கவே மாட்டோம்

## இராதாகிருஷ்ணன் திட்டவட்டம்

கொழும்பு, மார்ச் 04

2019 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் ஜனாதிபதிக்கான நிதி ஒதுக்கீட்டுக்கு எதிராக தமிழ் முற்போக்கு கூட்டணி வாக்களிக்காது என்று விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சர் வீ. இராதாகிருஷ்ணன் நேற்று தெரிவித்தார்.



தலவாக்கலையில் நடைபெற்ற நிகழ்வொன் றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பட்ஜெட்டில் ஜனாதி பதிக்கான நிதி ஒதுக்கீட் டுக்கு எதிராக வாக்களித்து அதை தோற்கடிக்க வேண் டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை எம்.பிக்கள் சிலர் கருத்து வெளியிட்டுவருகின்றனர். இது ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்து அல்ல. கடந்தகாலங்களில் ஜனாதிபதி பதவியை வகித்தவர் கள், தங்கள் செலவினங்களுக்காக கோடிக்கணக்கான ரூபாய் களை ஒதுக்கிக்கொண்டனர். எனினும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அப்படியான நபர் கிடையாது.

அத்துடன், ஐ.தே.கவின் பின்வரிசை எம்.பிக்கள் சிலரின் இத்தகைய செயற்பாடானது, ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் அரசியல் ரீதியில் முறுகலை ஏற்படுத்தும்.

எனவே இந்த நாட்டின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு நாம் செயற்பட வேண்டும். நாங்கள் தமிழ் முற்போக்கு கூட்டணி என்ற வகையில் அப்படியே செயற்படுகின்றோம்.

ஜனாதிபதியும் பிரதமரும் ஒன்றாக பயணித்தால் மாத்திரமே நாட்டின் அபிவிருத்திகளை முன்னெடுக்க முடியும் – என்றார்.

அதேவேளை, ஜனாதிபதிக்கான நிதி ஒதுக்கீடுகளுக்கு எதிராக ஐ.தே.கவின் பின்வரிசை எம்.பிக்கள் வாக்களிப்பார்கள் என்று முஜிபூர் ரஹ்மான் நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தார். (ஐ)

# இலங்கை- இந்திய பயணிகள் கப்பல் சேவை இன்னமும் கூட திட்டமிடல் நிலையிலேதான்!



கொழும்பு, மார்ச் 04

இந்தியா– இலங்கை இடையிலான, பய ணிகள் கப்பல் சேவை இன்னமும் ஆரம்பத் திட்டமிடல் நிலையிலேயே இருப்பதாக அரசு தெரிவித்துள்ளது.

மீண்டும் கப்பல் சேவையை ஆரம்பிப்பது குறித்து, இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, இந்திய அதிகாரிகளு டன் பேச்சுக்களை நடத்தியுள்ளார் என்று சுற்று லாத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இந்தப்படகு சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட் டால் இலங்கையின் சுற்றுலாத்துறையைப் பெரிதும், ஊக்கவிக்கும் என்றும் அவர் கூறி யுள்ளார். இந்தியாவில் இருந்து அதிகளவு சுற் றுலாப் பயணிகள், இலங்கை வரும் வாய்ப்புக் கிட்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# இந்தியாவுக்கு மத்தளவை வழங்குவதா? இந்த வாரம் அமைச்சரவையில் முடிவு

கொழும்பு, மார்ச் 04

மத்தள விமான நிலையத்தின் செயற்பாடு களைக் கையாளும் பொறுப்பை இந்தியாவுக்கு வழங்குவது தொடர்பாக இந்த வாரம் அமைச்சரவை முடிவு செய்யும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

மத்தள விமான நிலையத்தை இயக்கும் பொறுப்பை இந்தியாவின் விமான நிலையங்கள் அதிகார சபையிடம் கையளிப்பது தொடர்பான அமைச்சர வைப் பத்திரம் இந்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அறியப்படுகிறது.

நட்டத்தில் இயங்கிவரும் மத்தள விமான நிலை யத்தை, இந்தியாவிடம் ஒப்படைப்பது குறித்து கடந்த ஆண்டு தொடக்கம், இந்தியாவுடன் இலங்கை அரசு பேச்சுக்களை நடத்தியது.

பின்னர் இந்தப் பேச்சுக்கள் முடங்கிப் போயின.

இந்தநிலையிலேயே மத்தள விமான நிலையத் தின் செயற்பாடுகளைக் கையாளும் பொறுப்பை இந்தியாவுக்கு வழங்குவது தொடர்பாக, இந்த வாரம் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.


(ஐ)



# இன்னிங்ஸ், 52 ஓட்டங்களால் நியூசிலாந்து அணி அபார வெற்றி

நியூஸிலாந்து மற்றும் பங்களா தேஷ் அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் நியூஸிலாந்து அணி இன்னிங்ஸ் மற்றும் 52 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

ஹமில்டன் மைதானத்தில் கடந்த 28 ஆம் திகதி ஆரம்பமான முதலாவது டெஸ்ட் போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.



இதன்படி களமிறங்கிய பங்களாதேஷ் அணி, முதலாவது இன்னிங்ஸிற்காக 234 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் அணியின் அதிகபட்ச ஓட்டமாக தமீம் இக்பால் 126 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். பந்து வீச்சில் அதிகபட்சமாக நெய்ல் வாக்னர் 5 விக்கெட்டுகளையும், டிம் சவுத்தீ 3 விக்கெட்டுகளையும் பெற்றுக்கொண்டனர்.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய நியூஸிலாந்து அணி, 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 715 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை, தனது துடுப்பாட்டத்தை இடை நிறுத்திக்கொண்டது.

இதன்போது நியூஸிலாந்து அணி சார்பில் கேன் வில்லியம்சன் ஆட்டமிழக்காது 200 ஓட்டங்களையும், ஜீட் ராவல் 132 ஓட்டங்களையும், டொம் லாதம் 161 ஓட்டங்களையும், ஹென்றி நிக்கோல்ஸ் 53, கொலின் டி கிராண்ட் ஹோம் ஆட்டமிழக்காது 76 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பந்து வீச்சில் சௌமியா சர்கார் மற்றும் மெயிடி ஹசன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், வீழ்த்தினர்.

இதனையடுத்து தற்போது, 481 ஓட்டங்கள் பின்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய பங்களாதேஷ் அணி 10 விக்கெட்களை இழந்து 429 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 52 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அவ்வணி சார்பில் சௌமிய சர்க்கார் 149 ஓட்டங்களையும், மஹமதுல்லா 146 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். பந்து வீச்சில் ட்ரென்ட் போல்ட் 5 விக்கெட்களையும், டிம் சவுத்தீ 3 விக்கெட்களையும் கைப்பற்றினார். இப்போட்டியின் ஆட்டநாயகனாக கேன் வில்லியம்சன் தேர்வு செய்யப்பட்டார்.

# பெடரர் சம்பியன்!



ஆண்களுக்கானடுபாய் ரென்னிஸ் சம்பியன்ஷிப் டென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் வெற்றிபெற்று ரொஜர் பெடரர் 100 சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற இந்தத் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், சுவிஸ்லாந்தின் முன்னணி வீரரான ரொஜர் பெடரர் 20 வயதுடைய, கிரேக்கத்தின் ஸ்டீபனோஸ் சிட்ஸிபாஸை எதிர்கொண்டார்.

ஆரம்பம் முதல் ஆக்ரோஷமாக விளையாடிய ரொஜர் பெடரர் முதல் செட்டை 6:4 எனக் கைப்பற்றினார். தொடர்ந்தும் இரண்டாவது செட்டை வெல்லவேண்டும் என்ற முனைப்புடன் விளையாடிய ஸ்டீபனோஸ் அந்த செட்டையும் 4:6 என இழந்தார்.

இதன் காரணமாக இறுதியில் 6:4 6:4 என செட்டை கைப்பற்றி ரொஜர் பெடரர் 100 சம்பியன் கிண்ணத்தை வென்றுள்ளார். இதேவேளை அமெரிக்காவின் முன்னாள் வீரர் ஜிம்மி கோன்னர்ஸ் 109 சம்பியன் கிண்ணத்தை வென்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தலைவராக மீண்டும் கும்ப்ளே!



இந்திய அணியின் முன்னாள் தலைவர் அனில் கும்ளே ஐ.சி.சி.யின் கிரிக்கெட் குழுவின் தலைவராக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிரிக்கெட்டின் முன்னேற்றத்திற்காகவும், விதிகளை மாற்றம் செய்வதற்காகவும் ஆலோசனை வழங்க ஐ.சி.சி. கிரிக்கெட் குழு உருவாக்கப்பட்டது.

இதன் தலைவராக கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் கும்ப்ளே இருந்து வருகிறார்.

இந்நிலையில், அந்த பதவிக்கு 48 வயதாகும் கும்ப்ளே மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆஸ்திரேலிய அணிக்கு பதிலடி கொடுத்த இந்தியா

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான முதல் ஒருநாள் சர்வதேச போட்டியில் இந்திய அணி 06 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றுள்ளது.

இந்தப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்ரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.


இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாட களம் இறங்கிய ஆஸ்திரேலிய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 236 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதன்போது ஆஸ்திரேலிய அணியின் அதிகபட்ச ஓட்டமாக உஸ்மான் கவாஜா 50 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் மொஹமட் ஷமி, பும்ரா மற்றும் குல்தீப் யாதவ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து பதிலுக்கு 237 என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடத் களம் இறங்கிய இந்திய அணி 48.2 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை மாத்திரமே இழந்து 240 ஓட்டங்களை பெற்று 6 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் இந்திய அணி சார்பில் கேதர் யாதவ் 81 ஓட்டங்களையும், டோனி 59 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

இந்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் ஒன்றுக்கு பூச்சியம் என்ற அடிப்படையில் இந்திய அணி முன்னிலை பெற்றுள்ளது.



# சூதாட்டத்தில் ஈடுபட்டால் ஐந்து வருடங்கள் சிறை!

## ஹரீன் பெர்னாண்டோ அதிரடி



முறைகேடாக நடந்துகொள்ளும வீரர், வீராங்கனைகளுக்கு எதிராக கடுமையான சட்டங்கள் அமுல்படுத்தப் படவுள்ளன என விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஆட்டநிர்ணயம், சூதாட்டம் மற்றும் தடை செய்யப்பட்ட ஊக்கமருந்துப் பாவனையில் ஈடுபடுகின்றமை கண்டறியப்பட்டால் தகுதி தராதரம் பாராமல். அவர்களுக்கு ஐந்து வருடங்கள் சிறைத் தண்டனை அல்லது 50 இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்படுவதற்கான சட்டத்தை விரைவில் அமுல்படுத்த உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம், இவ்வாறான சட்டத்தை நிறைவேற்றுகின்ற முதல் ஆசிய நாடாக இலங்கை மாறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பிலான சட்டவரைவொன்றை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் கூறினார்.

காலைக்கதிர் Kalaikathir



## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பெண்கள் எழுச்சி மாநாடு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

போர் முடிவடைந்த பின்னர் தமிழ்த்தேசம்தனது இருப்புக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றது. ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்ட நாளில் இருந்து கடந்த ஒன்பது வருடங்களாக தமிழ்த் தேசத்தின் இருப்பை இல்லாமல் செய்வதற்காக ஒரு முயற்சி முன்னெடுக்கப்பட்டுக் கொண்டு வருகின்றது. அந்த முயற்சிக்குப் பல காரண அம்சங்கள் உள்ளன.

அதில் முதலில் தமிழர் ஒரு தேசமாக இருப்பதைக் கைவிட வேண்டுமென்பதுதான் அவர்களது முக்கியமான குறிக்கோள். தமிழர் தொடர்ந்தும் ஒரு தேசமாக சிந்திக்கின்றவரை எங்களுக்கென்று தனித்துவம் பேசும் இனமாக நாங்கள் தொடர்ந்தும் இருப்போம்.

கடந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் இலங்கை அரசு விரும்பித்தயாரித்த ஒற்றையாட்சி அரசமைப்புக்கு ஆணையைக் கேட்டு தமிழ் மக்களின் பிரதான அரசியல் கட்சியாகக் கூறிக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்டது. அந்த ஒற்றையாட்சி அரசமைப்புக்கு ஆணையைக் கேட்டுப் போட்டியிட்டு இடைக்கால அறிக்கைக்கு தமிழ் மக்கள் அமோக ஆதரவை வழங்குவார்கள் என்று அவர்கள் எதிர்பார்த்தனர்.

ஆனால் கடந்த ஒன்பது வருடங்களாக நடந்த சதியை நாங்கள் அம்பலப்படுத்தியதை அடுத்து உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரிய பின்னடைவை அடைந்தது. அவர்களுடைய வாக்கு வங்கி அரைவாசிக்கு மேல் விட்டு விலகிய சூழ்நிலையில் அவர்கள் அந்த முயற்சியைக் கைவிடுவார்கள் என்று நாங்கள் எதிர்பார்த்தோம்.

ஆனால் அவர்கள் அப்படிச் செய்யவில்லை. அந்த முயற்சி மீளவும் புதிப்பிக்கப்பட்டிருக்கின்றது. இதற்காகக் கடந்த வாரம் புதிய குழு நியமிக்கப்பட்டிருக்கின்றது. தமிழ் மக்களை ஏமாற்றி இன்னுமொருமுறைஒற்றையாட்சி அரசமைப்பை எம்மீது திணிப்பதற்கும் கடந்த முறைகளுக்கும் விட இந்த முறை வித்தியாசமாக தமிழ் மக்களின் முழுமையான ஆதரவோடு அந்த ஒற்றையாட்சியை நான்காவது முறையாக நிறைவேற்றுவதற்கும் அவர்கள் முடிவெடுத்திருக்கின்றார்கள். இது தான் இன்றைய அரசியல் யதார்த்தம்.

கடந்த 70 வருடங்களாக இலங்கையில் மூன்று அரசமைப்புக்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அந்த மூன்றும் ஒற்றையாட்சி அரசமைப்பாகத்தான் அமைந்திருந்தன. அந்த மூன்றையும் சிங்கள அரசுகள் நிறைவேற்றுகின்ற போது தமிழ்த் தலைவர்கள் நிராகரித்திருந்தார்கள். எம் மக்களையும் அதனை நிராகரிக்கச் சொல்லிக் கேட்டார்கள். ஆனால் இந்த முறை எம்மால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் – பிரதிநிதிகள் – தமிழ்ச் சரித்திரத்தில் முதற் தடவையாக அதே ஒற்றையாட்சி அரசமைப்பை நாம் ஆதரிக்க வேண்டுமென்று கேட்கின்றார்கள்.

இந்தத் தீவிலே ஓர் இனப் பிரச்சினை உள்ளது என்று உலகத்துக்கு நாங்கள் சொல்லக்கூடிய ஒரு சூழல் இந்த ஒற்றையாட்சி அரசமைப்பை நாங்கள் நிராகரித்து வந்ததாலேதான் அமைந்திருந்தது. ஒரு நாட்டுக்கு பிரதான சட்டம் அரசமைப்பு. அந்த நாட்டின் அனைத்து மக்களும் ஏற்றுக் கொண்டு, நாட்டில் வாழும் அனைத்து மக்களும் இது எங்கள் நாடு என்று சொல்லக் கூடிய வகையில் அந்த அரசமைப்பு அமைய வேண்டும்.

இலங்கைத் தீவில் கடந்த மூன்று அரசமைப்பையும் ஒற்றையாட்சி அரசமைப்பாக நிறைவேற்றிய காரணத்தினாலேயே தமிழ்த் தரப்புக்கள் அதனை நிராகரித்தன. அவ்வாறு நிராகரித்தபடியால் இங்கு இனப்பிரச்சினை உள்ளது என உலகுக்குச் சொல்லியுள்ளோம். ஆனால் இந்த 4 ஆவது அரசமைப்பை ஆதரிக்கும் முயற்சிகள் எம்மவர்களாலே மேற்கொள்ளப்படுகின்றது.

கூட்டமைப்பு அரசுடன் இணைந்து தயாரித்த ஒற்றையாட்சி அரசமைப்பை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கூறிக் கொள்ளும் சூழலிலேயே தமிழ்த் தேசத்தில் அந்த ஒற்றையாட்சி அரசமைப்பை நிராகரிக்கவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கும் ஒரேயொரு தரப்பாக நாங்கள் மட்டுமே இருக்கிறோம் – என்றார். (ஐ)

## ஜெனீவாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல்கள் வெளியாகியுள்ளன.

புதியவரைவுயோசனையின்படி இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பில் மேம்படுத்தல் திட்டங்கள், தொழில்நுட்ப உதவிகள், உண்மை மற்றும் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் போன்ற விடயங்கள் அடங்கவுள்ளன.

ஜெனீவாப் பிரேரணையின் இணை அனுசரணையாளர் நிலையில் இருந்து இலங்கை விலகிக் கொள்ளப் போவதாக ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேன அறிவித்த ஒரு வார காலப் பகுதியிலேயே புதிய யோசனையிலும் இலங்கையின் அனுசரணை குறித்துதகவல்வெளியாகியுள்ளது.

இலங்கையின் படையினர் போர்க்குற்றங்களில் ஈடுபடவில்லை என்ற விடயத்தை வலியுறுத்தியே ஜனாதிபதி இந்த அறிவிப்பை விடுத்திருந்தார்.

இதேவேளை, இலங்கை தொடர்பில் உத்தியோகபூர்வமற்ற கலந்துரையாடல்கள் எதிர்வரும் நாளை செவ்வாய்கிழமை ஜெனீவாவில் இடம்பெறவுள்ளன. (ஐ)

## ஜெனீவாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று ஆங்கில வாரஇதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு மேலதிக காலஅவகாசம்வழங்குவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவே விக்னேஸ்வரன் ஜெனீவாவுக்குப் பயணமாகவுள்ளார்.

சி.வி.விக்னேஸ்வரன் தற்போது இந்தியாவில் தனிப்பட்ட பயணத்தை மேற்கொண்டுள்ளார். மகா சிவராத்திரிக்குப் பின்னரே அவர் நாடு திரும்புவார்.

அதன் பின்னரே, அவர் ஜெனீவாவுக்குப் பயணமாவார் என்றும் கொழும்பு ஆங்கில வாரஇதழ் குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, தமிழ் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளும் ஜெனீவா செல்லவுள்ளனர். (ஐ)

## வறுமையைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2019 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் மீதான வாக்கெடுப்பு ஏப்ரல்5ஆம்திகதிஇடம்பெறவுள்ள நிலையில், அது இறுதி வடிவம் பெற்றுள்ளதாக நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த பட்ஜெட்டில் வறுமை நிலையில் உள்ள மக்களை மேம்படுத்துவது தொடர்பான பல திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன எனநிதிஅமைச்சர்மேலும்கூறினார்.

அத்தோடு தனது பணிக்கு உதவிய மனோ தித்தவெல்ல மற்றும்டெஸ்ஹால்டிமெல் ஆகியோருக்கு தனது நன்றிகள் என அவர் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

எதிர்வரும் மார்ச் 5 ஆம் திகதி பட்ஜெட் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அத்தோடு பட்ஜெட் மீதான இரண்டாம் வாசிப்பு மார்ச் 6 ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை இடம்பெறும்.

மார்ச் 13ஆம் திகதி முதல் ஏப்ரல் 5 ஆம் திகதி வரை குழுநிலை விவாதம் இடம்பெறும். தொடர்ந்தும் அன்றைய தினம் பட்ஜெட் மீதான வாக்கெடுப்பு இடம்பெறும். (ஐ)

## திருப்பதியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருப்பதி வெங்கடேசப் பெருமாளை தரிசிக்க இந்தியா சென்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் மாலை சென்னை விமான நிலையத்திலிருந்துதிருப்பதிக்கு அருகிலு ரேணிகுண்டா விமான நிலை துக்குச் சிறப்பு உலங்குவா மூலம் வந்திறங்கினார்.

அங்கிருந்து நேரடியாக திருமலைக்கு வந்தபோது அவருக்கும் அவரது மனைவி மைத்ரிக்கும் தேவஸ்தான அர்ச்சகர்கள் கோயிலின் பாரம்பரிய முறைகளில் வரவேற்பு அளித்தனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை, வெங்கடேசப்பெருமாளை தரிசனம் செய்வதற்கு முன்னர் ரணில், துலாபாரம் (எடைக்கு எடை காணிக்கை) எனப்படும் சடங்கை நிறைவேற்றினார்.

ஏழுமலையானுக்கு வேண்டுதல் செய்துகொண்ட ரணில் விக்கிரமசிங்க, துலாபாரம் எனப்படும் சடங்கின் ஒரு பகுதியாக, ஆளுயர தராசின் ஒரு தட்டில் அமர்ந்து கொண்டார். அவரது எடைக்கு நிகராகத் தானியங்கள் அல்லது தங்கம், வெள்ளி அல்லது பணமாக ஏதாவது சிலவற்றை இன்னொரு தட்டில் வைக்கவேண்டும் என்பது ஐதீகம்.

அவ்வாறே தனது வேண்டுதலை நிறைவேற்றிய ரணில், அதனை காணிக்கையாகவும் செலுத்தினார். அதன் பின்னர் அவரும் அவரது மனைவி, மற்றும் அவருடன் வந்த அதிகாரிகள் அனைவரும் ஏழுமலையானைத் தரிசனம் செய்தனர்.

ரணில் திருப்பதி கோயிலில் ஒரு மணிநேரம் செலவிட்டார். தரிசனத்தின்போது அவருக்குப் புனித பட்டுத்துண்டு அணிவித்து மரியாதை வழங்கப்பட்டது. பிரசாதமும் சிறிய போத்தலில் புனித தீர்த்தமும் வழங்கப்பட்டன. ஆலயத்தில் உள்ள ரங்கமண்டபத்தில் மூத்த அர்ச்சகர்கள் வேதாகம மந்திரங்கள் முழங்க, ரணில் விக்கிரமசிங்கவுக்கு சிறப்பு ஆசீர்வாதங்களை வழங்கினர்.

பின்னர் அவர் சென்னை வழியாகக் கொழும்பு திரும்பினார். (ஐ)

## நீதிமன்றின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையிலும் மாநகர சபையின் அனுமதி பெறப்படாமல் மாநகர சபை எல்லைக்குள் – சபை அலுவலகத்துக்கு முன்னாலேயே பல கம்பங்கள் நேற்று நாட்டப்பட்டுள்ளன என மாநகர சபையினால் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கேபிள் சேவை தனியார் நிறுவனம் ஒன்றினால் மாநகர சபையின் அனுமதிபெறப்படாமல் இந்தக் கம்பங்கள் நாட்டப்பட்டன எனக் கூறப்படுகின்றது.

இந்த விவகாரம் தொடர்பில் ஏற்கனவே நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. மாநகரசபையின் அனுமதி பெறப்படாமல் மாநகர சபை எல்லைக்குள் வீதியோரங்களிலோ பொது இடங்கலிலோ எந்தவித கம்பங்களும் நட்டப்பட முடியாது என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

இந் நிலையில் மாநகர எல்லைக்குள் நேற்றுமுன்தினமும் நேற்றும் பல புதிய கம்பங்கள் நாட்டப்பட்டுள்ளன. சபையின் அனுமதி பெறப்படாமல் சபை எல்லைக்குள் இவ்வாறு மின் கம்பங்கள் நாட்டப்பட்டுள்ளமை தொடர்பில் மாநகர சபையின் துணை முதல்வர் துரைராசா ஈசன் மற்றும் மாநகர அதிகாரிகள் நேற்றுக் காலை நேரில் சென்று பார்வையிட்டனர்.

இதனைத் தொடர்ந்து சபையின் அனுமதி பெறப்படாமல் சபை எல்லைக்குள் கம்பங்கள் நாட்டப்பட்டுள்ளன என யாழ் பொலிஸ் நிலையத்தில் மாநகர சபையின் ஆணையாளர் மற்றும் துணை முதல்வர் தலைமையில் மாநகர சபையினால் முறைப்பாடொன்றும் நேற்று மதியம் பதிவு செய்யப்பட்டது.

இவ்வாறு பொலிஸ் நிலையத்தில்முறைப்பாடுபதிவுசெய்யப்பட்ட நிலையிலும் புதிது புதிதாக வேறு வேறு இடங்களில் கம்பங்கள் நடப்படுவதும் அந்தக் கம்பங்கள் ஊடாக கேபிள் இணைப்புக்கள் பொருத்தும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன.

இந்தப் வேலைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த இடத்திற்கு விரைந்த மாநகர சபையின் துணை முதல்வர் ஈசன் மற்றும் அதிகாரிகள் சபையின் அனுமதி பெறப்படாமல் இந்தச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாதென்றும் அவ்வாறு அனுமதியில்லாமல் இதனை முன்னெடுப்பது யார் என்றும் கேட்டமையுடன் இந்தப் பணிகளை நிறுத்துமாறு தாம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர் எனவும் கூறினர்.

ஆயினும் அவர்களின் அறிவுறுத்தலையும் மீறித் தொடர்ந்தும் கம்பம் நடும் வேலைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன. அதனையடுத்து மீளவும் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு யாழ்ப்பாணப் பொலிஸாரும் மாநகர சபை துணை முதல்வரும் மற்றும் மாநகர சபை அதிகாரிகளும் வருகை தந்த சமயத்திலும் புதிய கம்பம் நடும் வேலைகள் மும்முரமாக நடந்து கொண்டிருந்தன.

கம்பங்களை நிறுத்திக்கொண்டிருந்தவர்கள் பொலிஸாரின் தலையீட்டை அடுத்து அந்தச் செயற்பாட்டைக் கைவிட்டு அங்கிருந்து சென்றனர்.

இதே வேளை மாநகர சபையின் அனுமதியில்லாமல் கம்பங்கள் நாட்டப்படுவது தொடர்பில் அங்கு நேரில் சென்று செய்தி சேகரிப்பில் ஈடுபட்ட ஊடகவியலாளர்களையும் அவ்வேலையை முன்னெடுத்தவர்கள் அச்சுறுத்தியிருக்கின்றனர்.

இங்கு யாரும் படங்கள் மற்றும் வீடியோக்களை எடுக்க வேண்டாம் என்றும் அவ்வாறு எடுத்தால் தாங்களும் அவர்களைப் படம் எடுப்போம் எனக் கூறி அங்கிருந்த ஊடகவியலாளர்களைப் படம் பிடித்தனர். தாங்கள் யார் எனப் பின்னர் காட்டுவோம் என ஊடகவியலாளர்களை அச்சுறுத்திய பின்னரே அவர்கள் அங்கிருந்த அகன் றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## திருக்கேதீஸ்வரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வளைவு உள்ளூர் மக்கள் சிலரால் உடைக்கப்பட்டு அகற்றப்பட்டது.

மத நல்லிணக்கம் என்று தெரிவிக்கப்பட்ட இந்த வளைவு அகற்றப்பட்டது என அந்த மக்களால் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் மாந்தைச் சந்தியிலிருந்து திருக்கேதீஸ்வரம் சிவன் ஆலயத்துக்குச் செல்லும் கோயில் வீதியில் அமைக்கப்பட்டிருந்த வளைவில் திருத்தவேலை செய்வதற்காகத் தாம் சென்றிருந்தனர் என்றும், அதற்கு அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் சிலர் எதிர்ப்பை வெளியிட்டனர் என்றும் மன்னார் மாவட்ட இந்து மத பீடத்தின் தலைவர் சிவஸ்ரீ மகா தர்ம குமார குருக்கள் தெரிவித்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை கோவில் வீதியில் அமைக்கப்பட்ட சிவாத்திரி வளைவு உள்ளூர்மக்கள்சிலரால்அகற்றப்பட்டது.

வளைவில் இந்துமதக் கொடியும் பறக்கவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ் எழுச்சிப் போராட்ட பேரணிக்கு தமிழர் பேசும் மக்கள் அனைவரையும் பல்கலைக்கழகத்தில் ஒன்று திரளுமாறும் மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது. இது தொடர்பாக மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

ஈழத்தமிழர்களிற்கு இழைக்கப்பட்ட அநீதிகளிற்கு நீதியினை கோரி மக்கள் எழுச்சிப் போராட்டம் ஒன்றினை எதிர் வரும் 16 ஆம் திகதியன்று முன்னெடுக்கத் தீர்மானத்துள்ளோம். இந்த மக்கள் எழுச்சிப் பேரணிக்கு தமிழ் பேசும் மக்களை அலைகடலெனத் திரண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒன்று கூடுமாறு அழைக்கிறோம். தமிழ் மக்களை அணிதிரட்ட ஒத்துழைப்பு வழங்குமாறு பொது அமைப்புகள் மற்றும் மதகுருமாரை வேண்டிக் கொள்கிறோம்.

இனத்திற்காக நீதி கோரி அணிதிரள்வோம்.

ஈழத் தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறைகள் என்பவை இலங்கையில் நீண்ட காலமாக கட்டமைக்கப்பட்ட ரீதியில் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. அத்தகைய அடக்குமுறைகள் இலங்கைத்தீவில் திட்டமிடப்பட்ட ரீதியிலான தமிழ் மக்களிற்கு எதிரான இனச்சுத்திகரிப்பாகவே உள்ளன.

அத்தகைய இனச்சுத்திகரிப்பின் உச்சமே இறுதிப் போரில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்டும், காணாமலாக்கப்பட்டும் ஈழத் தமிழர்களிற்கு எதிராக இடம்பெற்ற இன அழிப்பு, போர்க்குற்ற மீறல்கள், மனித உரிமைச் சட்ட மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்கள்களாகும். அவற்றுக்குரிய பரிகார நீதியை சர்வதேசம் தமிழ் மக்களிற்கு பெற்றுத்தர நாம் விழிப்போடு மக்கள் எழுச்சிப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

ஜெனீவா மனித உரிமைகள் பேரவையினால் 2015இல் முன்மொழியப்பட்ட நிலைமாறு கால நீதிப் பொறிமுறைக்கு ஊடான உள்ளக பொறிமுறைகளையே இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற தவறிய நிலையிலும் ஏற்கனவே கால அவகாசங்கள் வழங்கப்பட்ட நிலையிலும் மீண்டும் கால அவகாசமே வழங்கப்படவுள்ளது. இதனை வெறும் கண் துடைப்பு நாடகமாகவே நாம் நோக்க வேண்டியுள்ளது.

இந்நிலையில் ஈழத் தமிழர்களிற்கு இழைக்கப்பட்ட அநீதிகளிற்கு நீதி கோரி இந்த மக்கள் எழுச்சிப் போராட்டத்தை முன்னெடுக்கின்றோம். – என்றார்.

காலைக்கதிர்
Kalaikathir





நேற்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிள் மகளிர் அணி நடத்திய சர்வதேச மகளிர் தின பெண்கள் எழுச்சி மாநாட்டின் காட்சிகள்.

# பதுளையில் கிறீஸ் பேய்!

கொழும்பு, மார்ச் 04

**பதுளை, ஹாலிஎல பிரதேசத்திற்கு உட்பட்ட தோட்டங்களில் மர்ம மனிதர்கள் உலாவி வருகின்றனர் என்றும், மக்களை அச்சுறுத்தல், வீடுகளுக்குள் புகுந்து கொள்ளையடித்தல் போன்ற செயல்களிலும் ஈடுபட்டுவருகின்றனர் என்றும் முறைப்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது.**

கடந்த 23 ஆம் திகதி முதல் மேற்படி சம்பவங்கள் அரங்கேறிவரும் நிலையில் அவை தற்போது தலைவிரித்தாட தொடங்கியுள்ளன.

இதனால், இரவுவேலைகளில் தோட்ட இளைஞர்கள் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் ஹாலிஎல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தாலும், மக்கள் மத்தியில் ஏற்பட்ட அச்சமும், பீதியும் இன்னும் குறையவில்லை எனப் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

தமக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு தோட்ட மக்கள், பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷிடம் முறையிட்டனர். இதையடுத்து இவ்விவகாரத்தை அவர் பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளார்.

இதன்படி விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களை நேற்று நேரில் சென்றுபார்வையிட்ட வடிவேல் சுரேஸிடம், இதுமுன்னர்போல்கிரிஸ்பேயாகக்கூட இருக்கலாம். எனவே, பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள் என்று மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என இராஜாங்க அமைச்சரும் உத்தரவாதமளித்தார். (ஐ)

# மைத்திரியே ஜனாதிபதி வேட்பாளர்!

## விடாப்பிடியாக உள்ளது சு.க.



கொழும்பு, மார்ச் 04

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவே வேட்பாளராகப் போட்டியிட வேண்டும் என்பதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுதியாக உள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சி மற்றும் பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகளுக்கிடையில் பரந்த கூட்டணி குறித்து பேச்சு இடம் பெற்று வருகின்ற போதிலும், இது சுதந்திரக் கட்சியின் முடிவு என அவர் கூறியுள்ளார்.

அத்தோடு ஜனாதிபதி வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவே இருக்கவேண்டும் என்பதில் தமது கட்சி உறுதியாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இரு கட்சிகளுக்கிடையிலான பரந்த கூட்டணி தொடர்பாக உடன்பாடு எதுவும் எட்டப்படவில்லை. இருப்பினும் வரவிருக்கும் தேர்தலில் போட்டியிடுவதற்காக சு.கவுடன் கைகோர்த்துச் செல்ல விரும்பும் ஏனைய அரசியல் கட்சிகளுடன் பரந்த கூட்டணியை அமைக்கும் எண்ணம் தமக்கு இருப்பதாகவும் அவர் கூறினார். (ஐ)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையானதை செய்வோம்

## செல்வம் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, மார்ச் 04

பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான அனைத்து வரப்பிரசாதங்களையும் பெற்றுக்கொடுப்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான இலக்காகும் என அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.



வவுனியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கொள்கைக்காக செயற்படுபவர்கள்.

மக்களுக்குக் கிடைக்கவேண்டிய வரப்பிரசாதத்தைப் பெற்றுக்கொடுப்பதிலிருந்து எமது கட்சி ஒருபோதும் பின்வாங்காது-என்றார். (ஐ)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கிளிநொச்சி, மார்ச் 04

மல்லாவி-எருவில் பகுதியிலிருந்து உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியொன்றுடன் சந்தேகநப ரொருவர் பொலிஸாரால் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.



அந்த நபர்எருவில்-நட்டாங்கண்டல் பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடையவரென்று தெரிவிக்கப்பட்டது.

# அரிய வகை மரை மீட்பு

கொழும்பு, மார்ச் 04

கந்தளாய் -சூரியபுர, சுண்ணக்காடு காட்டுப் பகுதிக்குள் வெள்ளை மரையொன்று மீட்கப்பட்டுள்ளதாக கந்தளாய் வனவிலங்குகள் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

காட்டுப்பகுதியில் விறகு எடுக்கச் சென்ற இராணுவத்தினர், தாயை விட்டு அநாதரவான நிலையிலிருந்த இந்த மரையை மீட்டு கந்தளாய் வனவிலங்குகள் பாதுகாப்புத் திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்த மரை, ஈன்று ஒரு மாத காலமாக இருக்கலாம் எனவும் 3 அடி உயரமானதுடன் தொப்புளில்



காயம் ஏற்பட்டுள்ளதாகவும் கந்தளாய் வனவிலங்குகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அச்சகத்தில் 04.03.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.